பக்கங்கள்:13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 14 புதன்கிழமை 29.12.2021 கதிர் 54

### இது ரகசியம் அல்ல!

மறதிதான் வாழ்க்கையின் முக்கிய அங்கம். மறவாமை நிலைக்குமானால் அமைதியாக, சந்தோஷமாக, இணக்கமாக வாழவே முடியாது. மற்றவர் செய்யும் நன்மைகளை விடுங்கள். தீங்குகளை தவறுகளை, கெடுதல்களை, பக்கம்02

# அதிகாரப் பகிர்வு கிட்டுமானால் சீனச் செல்வாக்கைத் தடுப்போம்

## இந்தியாவுக்கு சுமந்திரன் உறுதி



சென்னை, டிசெம்பர் 29

உரிய முறையில் இலங்கைத் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு கிட்டுவதை இந்தியா உறுதி செய்யுமானால், தமிழர் தாய்கத்தில் சீனா உட்பட வேறு எந்த வல்லாதிக்க சக்தியும் காலூன்றாமல் தமிழர்கள் பார்த்துக் கொள்வர் என்ற உறுதிமொழியை இந்தியாவுக்கு வழங்கியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன். ☞11

## மனோவுக்குத் தமிழில் அழைப்பாணை அனுப்பியது ஜனாதிபதி ஆணைக்குழு

### இன்று விசாரணை



தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பியை இன்று விசாரணைக்கு சமுகம் அளிக்கும்படி கோரி, தமிழ் மொழியில், அவரின் இல்லத்துக்கு ஜனாதிபதி ஆணைக்குழு அழைப்பாணை அனுப்பி வைத்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட விசேட ஜனாதிபதி ☞11

## ‘வல்வை சர்வதேசப் பட்டத் திருவிழா’ இந்தத் தடவை பொங்கல் தினதன்று!

### விளையாட்டுத்துறை அமைச்சின் ஆதரவுடன் நடக்கிறது



யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை பட்டத் திருவிழா இம்முறை இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் பூரண ஆதரவுடன் ‘வல்வெட்டித்துறை சர்வதேச பட்டத்திருவிழா -2022’ ஆக நடைபெறவுள்ளது.

யாழ். பட்டத் திருவிழா ஏற்பாட்டுக் குழுவினருக்கும் இளைஞர் மற்றும் ☞11

## 3 அமைச்சர்களின் பதவி நீக்கம் தொடர்பில் வெளியான தகவல்



தன்னை அமைச்சர் பதவியில் இருந்து நீக்குவதாக ஜனாதிபதியோ அல்லது வேறு எவரும் தெரிவிக்கவில்லை என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அமைச்சுப் பதவியை இராஜிநாமா செய்யும் எண்ணம் தமக்கு இல்லை எனவும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும், தன்னையும், விமல் ☞2

## வேலணை பிரதேச சபையின் அமர்வில் அமைதியின்மை!

### நடந்த தவறுக்கு மன்னிப்புக் கோரினார் தவிசாளர்

யாழ்ப்பாணம் - வேலணை பிரதேச சபை விசேட அமர்வில் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் வசமுள்ள, வேலணை பிரதேச சபை விசேட அமர்வு நேற்று தவிசாளர் நவசிவாயம் கருணாகரகுருமூர்த்தி ☞11

## ஆட்சி மாற்றம் வேண்டும்!

### மைத்திரி வலியுறுத்து



நாட்டின் தற்போதைய குழப்பத்தில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் நோக்கில் புதிய தொலைநோக்குப் பார்வை கொண்ட புதிய ஆட்சியை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தினார்.

முன்மொழியப்பட்ட விதி இது வரை இருந்த பாரம்பரிய அரச வடிவங்களில் இருந்து வேறுபட்டதாக இருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். ☞11

## 2022இல் நீண்ட விடுமுறை நாள்கள்

எதிர்வரும் 2022ஆம் ஆண்டு நீண்ட விடுமுறை நாள்களைக் கொண்ட ஆண்டாக காணப்படுகின்றது.

அதாவது 2022 ஆண்டில் 43 நீண்ட விடுமுறை நாள்கள் காணப்படுகின்றன.

எதிர்வரும் ஆண்டுக்கான நாள்காட்டியின்படி, இந்த நீண்ட விடுமுறைகளைத் தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது.

இதன்படி, 2022ஆம் ☞11

## யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர், செயலாளருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை



### 30 மாதங்களின் பின் தாக்கல்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்குள் 2019 மே 03ஆம் திகதி இராணுவத்தினர் நடத்திய தேடுதலின் போது, கைதுசெய்யப்பட்ட மாணவர்கள் இருவருக்கும் எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் உள்ள சான்றுப்பொருள்களை பாரப்படுத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது. ☞11

## மேயர் மணியை எதிர்த்து உறுப்பினர்கள் போராட்டம்



யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் வி. மணிவண்ணனுக்கு எதிராக யாழ். மாநகர சபை முன்றிலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ☞11

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாதிப்புகளை, நாசங்களை மறந்து, மன்னிக்க முடிவதால்தான் அமைதியாக – சந்தோஷமாக – வாழவும் முடிகின்றது. அந்த வகையில் மறதியும் கூட அத்தியாவசியமானதே.

ஆனால், மக்களின் அந்த மறதி என்ற முறைமைதான் நமது அரசியல்வாதிகள் பலருக்கு தகுந்த ஆயுதம், கருவி, மூலதனம் என்பதும் மறுபக்க உண்மையாகும்.

தமிழ்க் கட்சித் தலைவர்களின் கூட்டம் கடந்த 21ஆம் திகதி நடைபெற்றது. ஏதோ ஆரவாரமாக இணக்கம் ஏற்பட்டது போல காட்டப்பட்டது. நாமும் செய்திகளை வெளியிட்டோம்.

ஆனால், இரண்டொரு நாள்களில் விடயம் நொண்டுவது தெரிந்தது. கருத்து முரணிலையின் முதல் சான்றுகளை, தமிழர் முற்போக்கு முன்னணியின் தலைவர் மனோ கணேசனின் மின்னஞ்சல் மற்றும் அதற்கான கூட்டமைப்புப் பேச்சாளர் சுமந்திரனின் பதில் ஆகியவை மூலம் காலைக்கதிரில் கோடிகாட்டினோம்.

உடனே சம்பந்தப்பட்ட தரப்புகளுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. இரண்டு விதமாக காலைக்கதிருக்கு 'றியாக்ஷன்' காட்டப்பட்டது.

ஒன்று – காலைக்கதிர் இல்லாத பிரச்சினையை – வேறுபாட்டை – முரணிலையை – பூதாகாரப்படுத்திக் காட்டுகின்றது என்ற ஒரு பிம்பத்தை ஏற்படுத்தும் கருத்து முன்வைக்கப்பட்டது. காலைக்கதிரும் நானும் இவ்விடயத்தில் உண்மைகளை வெளிப்படுத்தாமல் வாயை மூடிக் கொண்டிருந்தால் உசிதம் என்ற மாதிரியான புனைகதையும் முன்வைக்கப்பட்டது.

மறுபுறத்தில் காலைக்கதிர் குறிப்பிட்ட மாதிரி நிலைமை இல்லை, இதோ இணக்கம் வந்து விட்டது, இன்னும் நான்கு நாள்களில் – வரும் 29ஆம் திகதி (அதாவது இன்று) அனைத்துத் தலைவர்களும் ஒப்பமிடுவார்கள், ஏற்பாடுகள் பூர்த்தி என்று ஆரவார அறிவிப்பு ஏற்பாட்டுக்குழு என்று தன்னை அழைத்துக் கொள்ளும் ரெலோ சார்பில் அதன் பேச்சாளர் சுரேந்திரன் குருசாமியால் விடுக்கப்பட்டது.

அது, காலைக்கதிர் செய்திக்கான 'மறுத்தான்' என்பதை அப்போதே புரிந்தும் அறிந்தும் கொண்டோம். ஆனால் ஏதோ காலைக்கதிர் செய்தியாலும், என் எழுத்துக்களாலும்தான் இணக்க நிலை குழம்புகின்றது என்பது போலவும், நாங்கள் வாய் மூடினால் நல்லது என்ற சாரப்படவும் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டமையால் சில தினங்கள் மௌனம் காத்தோம். பார்த்திருந்தோம்.

29ஆம் திகதி (இன்று) எல்லாத் தலைவர்களும் கையெழுத்திடுவார்கள் என்ற மாயையை உருவாக்கிய ரெலோ பேச்சாளரான (ரெலோ பேச்சாளர் என்பதனால், ரெலோ அங்கம் வகிக்கும் கூட்டமைப்பின் பேச்சாளரும்தான் தாம் என்பது போன்ற பந்தாவை அறிக்கைகளில் காட்டுகின்றவரான) சுரேந்திரன் குருசாமியிடம், உங்கள் அறிவித்தல் படி இன்று ஆவணத்தில் தலைவர்களினால் கையொப்பமிடப்படுமா என்று கோட்டால், அவர் பம்முகின்றார்.

"விடயங்களை செல்வம், சித்தர், மாவை, சம்பந்தன், மனோ, ஹக்கீம் போன்ற தலைவர்களே கையாளுகின்றனர். நான் ஆவணங்களை உரிய தலைவர்களுக்கு அனுப்பி விட்டேன். அவர்கள்தான் முடிவெடுத்துப் பதில் தர வேண்டும்" – என்று நழுவுகின்றார்.

29ஆம் திகதி ஆவணத்தில் ஒப்பமிடுதல் என்ற தமது அறிவிப்பை மக்கள் மறந்து விடுவர் என்று அவர் நினைக்கின்றார் போலும். மக்களின் மறதியில் அவ்வளவு நம்பிக்கை வைக்கக் கூடாது. அதுவும் ஒரு வாரத்துக்குள் மக்கள் மறந்து விடுவர் என்று நம்புவது முட்டாள்தனம்.

வாக்குறுதி அளிப்பது தொடர்பில் சம்பந்தனைத்தான் நாம் கிண்டல் பண்ணுவதுண்டு. அடுத்த தைப்பொங்கலுக்குள் தீர்வு, புது வருடத்துக்குள் தீர்வு, தீபாவளிக்குள் தீர்வு என்று அந்த மனிதர் தெரிவித்த அதீத நம்பிக்கையை நாம் எள்ளி நகையாடுவதுண்டு.

ஆனால், "தேசியப் பிரச்சினைக்கு அரசாங்கத்தினால் அடுத்த வருடத்துக்குள் தீர்வு முன்வைக்காவிடின் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை மேற் கொள்வேன். வடக்கில் உள்ள தமிழர்களின் சுதந்திரத்திற்காக என் உயிரையும் தியாகம் செய்யத் தயங்க மாட்டேன்." – என்று 2012 நவம்பரில் நாடாளுமன்றத்தில் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் சூளுரைத்தமையை நாம் மறந்து விட்டோம்.

அது மாத்திரமல்ல, விரைவில் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிப்பார் செல்வம் அடைக்கலநாதன் என்று தெரிவிக்கும் ஆரவார வாண்ணப் போஸ்டர்கள் கூட வன்னியில் ஒட்டப்பட்டிருந்தன.

இவற்றை எல்லாம் மக்கள் மறந்தவை போல ஆவண கையொப்ப நிகழ்வு இன்று நடைபெறும் என்ற ஆரவார அறிவிப்பையும் நாம் மறந்து போய் விடவேண்டியதுதான்.

ஏனெனில் 'ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம்; இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்' – என்றவாறு இவ்விடயத்தில் நிலைமை சிக்கிப்போய் நிற்கின்றது.

மலையகத் தமிழர் பிரச்சினைகளையும் உள்ளடக்கியதாக – 13ஆவது திருத்தத்தின் முழு நடைமுறையாக்கத்தை வலியுறுத்துவதாக – ஆவணம் இருந்தால் மட்டுமே ஒப்பமிடுவது குறித்துப் பரிசீலிக்கலாம் என்ற தெளிவான நிலைப்பாட்டுக்கு மலையகக் கட்சித் தலைவரான திகாம்பரம் வந்து விட்டார் எனத் தெரிகின்றது. அதனையே இராதாகிருஷ்ணனும் ஆதரிக்கின்றார். அதனால் அந்த வழியில் பயணிக்க வேண்டிய இக்கட்டு கூட்டின் தலைவர் மனோ கணேசனுக்கு. பெரும்பாலும் அதே நிலைப்பாட்டில்தான் ஹக்கீமும், ரிஷாத்தும் கூட. சிங்கள மக்களையும், சிங்களத் தலைவர்களையும், தரப்புகளையும் அவசரப்பட்டுப் பகைத்துக்கொள்ளும் நிலைப்பாட்டை எடுக்கவும் அவர்கள் விரும்பவில்லை எனத் தெரிகின்றது.

இந்த விடயங்களை எல்லாம் கவனத்தில் எடுத்த ஏற்பாட்டாளர்களான ரெலோ தலைவர் செல்வமும், பேச்சாளர் சுரேன் குருசாமியும் நேற்று முன்தினம் சம்பந்தன் ஐயாவைத் தேடி அவர் வீட்டுக்குச் சென்றனர்.

நிலைமையை விளங்கப்படுத்தி, கொஞ்சம் கீழிறங்கி வந்து, 13ஆவது திருத்த நடைமுறையாக்கத்தை வலியுறுத்தும் ஆவணத்தில் ஒப்பமிடுமாறு கெஞ்சாத குறையாகக் கேட்டனர்.

எல்லாவற்றையும் செவிமடுத்த சம்பந்தன் ஐயா, பிடி கொடுக்காமல் பதில் கூறி அவர்களை அனுப்பி வைத்தார்.

என் கட்சித் தலைவர்களுடன் பேசிவிட்டுப் பதில் கூறுகிறேன் என்பது சம்பந்தன் ஐயா தரப்பின் 'இராஜதந்திரப் பதில்.'

அப்படி கூறிய அவர், அதன் மூலம் விடயத்தை ஆறப் போடப் பண்ணி விட்டார் என்பது உறுதி.

இந்த விடயங்கள் குறித்து அடுத்த இரண்டொரு நாள்களுக்குத் தமது கட்சிக்காரர்களுடன் – மாவையுடனோ, சுமந்திரனுடனோ – பேசும் எண்ணம் அவருக்கு இல்லை எனத் தெரிகின்றது.

சுமந்திரனின் மகனுக்கு இன்று மாலை கொழும்பில் திருமணம். ஆரவாமில்லாத – இரு குடும்பத்தார் நிகழ்வு. மகனின் ஏழு வருட காதலை பெற்றோர் அங்கீகரிக்கும் இனிய நிகழ்வு. அதற்குள் சுமந்திரனைக் குழப்புவதில் சம்பந்தன் ஐயாவுக்கு விருப்பம் இல்லை. இரண்டு, மூன்று நாள் கழித்து செல்வம் – சுரேன் வருகை, பேசிய விடயங்கள் குறித்து அவர் சுமந்திரன், மாவையுடன் ஆலோசனை கலப்பார் என நம்புகிறேன்.

ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம். 13 ஆவது திருத்தத்தின் நடைமுறையாக்கத்தை மட்டும் வலியுறுத்தும் ஆவணத்தில் சம்பந்தனோ, தமிழரசுத் தலைவர் மாவையோ ஒப்பமிடமாட்டார்கள். அதாவது, 21ஆம் திகதி கூட்டத்தை அடுத்து சுமந்திரன் இறுதி செய்து கொடுத்த ஆவணத்தில் தலைப்பு, விடயதானம், முடிவுரை ஆகியவற்றில் பெரிய மாற்றம் எதனையும் செய்யும் ஏற்பாடுகளுக்கு தமிழரசு இணங்கவே இணங்காது.

21ஆம் திகதி கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டு, இறுதி செய்யப்பட்ட ஆவணத்துக்கு மலையக மற்றும் முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் இணங்குவதும் இப்போது துர்லபமே.

தமிழரசை விட்டு விட்டோ அல்லது மறுபக்கத்தில் மலையக, முஸ்லிம் கட்சிகளை விட்டு விட்டோ, ஒரு பக்க நிலைப்பாட்டை வலியுறுத்தும் ஆவணத்தில் கையொப்பம் பெறுவதானால் அது இன்றும் கூட ஒப்பேறும். எல்லாத் தரப்பும் ஒப்பமிடுவதானால் அது இழுபடும். கடந்த வார நடுப்பகுதியில் காலைக்கதிர் கூறிய நிலைமைதான் இன்றும்.

இன்னொரு முக்கிய விடயத்தையும் இன்று வாசகர்களுக்குப் பகிர விரும்புகிறேன்.

13ஆவது திருத்தத்தின் முழு நடைமுறையாக்கத்துக்கு வலியுறுத்தும் இந்த முயற்சியை சில கட்சித் தரப்புகள் ஆரம்பித்த போது அப்படி ஒரு வலியுறுத்தல் ஆவணத்தை – தமிழ்ப் பேசும் தரப்புகளின் ஒற்றுமைப்பட்ட நிலைப்பாட்டு அறிவிப்பை – இந்தியா எதிர்பார்ப்பது போன்ற ஒரு படம் காட்டப்பட்டது. ஏன், இந்த முயற்சிக்கான பின்புலம் – பக்கபலம் – இந்தியத் தரப்பே என்று பேசப்பட்டது. நடைபெற்ற நிகழ்வுகளும், ஆரவார ஏற்பாடுகளும், ஒழுங்குபடுத்தலும், ஒன்று கூடல்களின் பின்னரான கும்மாளங்களும் அப்படி ஒரு படத்தை – பிரமிப்பையே – தந்து நின்றன. இந்தியத் தரப்பில் இந்தப் பிரிவு பின்புலம், அந்தப் பிரிவு பக்கத்துணை என்றெல்லாம் கூட சந்தேகிக்கப்பட்டது.

விசாரித்துப் பார்த்ததில் இவற்றுக்கும் இந்தியாவுக்கும் எந்தத் தொடர்புமில்லை என்பதை உறுதிப்படுத்த முடிந்தது. அது மட்டுமல்ல, உண்மையில் பின்புலம் யார் என்பதை மோப்பம் பிடிக்கும் முயற்சியில் இந்தியத் தரப்புகளே மும்முரமாக இருக்கின்றமையை அறியமுடிந்தது.

இந்தியப் பக்கத்தில் ஒரு தரப்புக்குத் தெரியாமல் இன்னொரு தரப்பு செய்யுமோ என்று சந்தேகப்பட்டேன். ஆனாலும் அதுவும் அடியோடு மறுக்கப்பட்டது.

"இப்படி ஒரு முயற்சியை எடுக்கப் போகிறோம். எல்லோரும் ஒப்பமிட்டு ஆவணம் தரப்போகிறோம் – என்றார்கள். நல்லது என்று பதில் தந்தோம். அவ்வளவுதான் எங்கள் பங்களிப்பு. மிகுதி விடயத்தை நாங்களும் உங்களைப் போல பார்த்திருக்கிறோம் அவ்வளவுதான்" – என்பது இந்தியப் பக்க நிலைப்பாடாக இருக்கின்றது.

"சம்பந்தனை நெருக்கடியிலும் இக்கட்டிலும் ஆழ்த்தும் இத்தகைய நடவடிக்கைகளுக்கு இன்றைய நிலையில் இந்தியா ஆசீர்வாதம் அளித்துத் தூண்டவோ, பின்புலமாக நிற்கவோ மாட்டாது." – என்றும் சம்பந்தப்பட்ட இன்னொரு வட்டாரம் சுட்டிக்காட்டியது.

அப்படியானால், இத்தகைய ஏற்பாட்டுக்குப் பின்புல 'ஸ்பொன்ஸர்' யார்?

வாசகர்களே ஊகிக்கலாம்.

தமிழ்க் கூட்டமைப்பின் கட்டுறுதியை, சொந்தக் கையைக் கொண்டே கண்ணைக் குற்றும் வேலையாக யார் நகர்த்துகின்றார்கள் என்பது சம்பந்தனுக்கும் நன்கு புரிந்திருப்பதாக நான் அறிந்தேன். கூட்டமைப்பாக – தமிழர்கள் கட்டுறுதியாக – இருப்பதை சிதறப் பண்ணுவதற்கு ஊடுருவி அனுப்பப்பட்டவர்களின் கைவரிசை கனகச்சிதமாக அரங்கேறுகின்றது என்பது நிச்சயம்.

பத்தி இன்று நீண்டு விட்டது. மிகுதி நாளை பார்ப்போம்.

– மின்னல் –

## கிணற்றில் விழுந்து சிறுவன் உயிரிழப்பு

மெதிரிகிரிய, குசும்பொகுன பிரதேசத்தில் கிணறு ஒன்றில் விழுந்து ஒன்பது வயது சிறுவன் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குசும்பொகுன ஆரம்பப் பாடசாலையில் தரம் 4 இல் கல்வி கற்கும் எச்.கே. சமந்த கவிந்து சந்தருவன் குமார என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சிறுவன் விளையாடிக் கொண்டிருந்த பந்து இரண்டு நாள்களுக்கு முன் வீட்டின் பின்புறமுள்ள கிணற்றில் விழுந்துள்ளது. பந்தை எடுத்துத் தருமாறு பலமுறை கேட்டும் தந்தை அதை மறுத்துள்ளார்.

தாய் தனது இளைய சகோதரனுடன் அயல் வீட்டுக்குச் சென்றிருந்தபோது குறித்த சிறுவன் கிணற்றிலிருந்து பந்தை எடுக்க முற்பட்டபோதே கிணற்றில் விழுந்து உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சிறுவன் காணாமல்போயுள்ளான் என்று பெற்றோர் மெதிரிகிரிய பொலிஸாருக்கு முறைப்பாடு செய்ததன் பின்னர் பல்வேறு இடங்களில் பெற்றோர் சிறுவனைத் தேடியுள்ளனர். இருந்தபோதும் சிறுவன் கிடைக்கவில்லை.

கிணற்றில் விழுந்தது எனக் கூறப்படும் பந்து முற்றத்தில் காணப்பட்டுள்ளது. அதன்பின்னர் மேற்கொண்ட தேடுதலின்போது தோட்டத்தில் பாதுகாப்பற்ற நிலையில் கட்டப்பட்டிருந்த கிணற்றில் வீழ்ந்த நிலையில் சிறுவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மெதிரிகிரிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

---

## 3 அமைச்சர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வீரவன்ஸவையும், வாசுதேவ நாணயக்காரவையும் பதவியில் இருந்து நீக்குவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தால் எந்தப் பிரச்சினையும் ஏற்படாது என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில் பத்திரிகை ஆசிரியர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார் என நேற்றுமுன்தினம் தேசிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமைச்சரவை தீர்மானத்துக்கு எதிராக நீதிமன்றத்துக்குச் சென்றால் தனது அமைச்சுப் பதவியை இராஜிநாமா செய்ய வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்ததாக அவர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

எவ்வாறாயினும், நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அமைச்சர் உதய கம்மன்பில, யுகதனவி உடன்படிக்கை தொடர்பில் தானும் ஏனைய மூன்று அமைச்சர்களும் எவ்வித தவறும் செய்யவில்லை எனத் தெரிவித்தார்.

(மற்றொரு செய்தி 13ஆம் பக்கத்தில்...)



# எந்தநேரத்திலும் நீதிக்காகப் போராடும் கட்சியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு!

## சாணக்கியன் பெருமிதம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது எந்த சந்தர்ப்பத்திலும் நீதிக்காகப் போராடும் ஒரு கட்சியாகும். இந்த இளைஞர் விடயத்திலும் நீதிக்காகப் போராடுவோம். அவருடன் இறந்த மூன்று சகோதரர்களுக்காகவும் குரல் கொடுப்போம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்திற்கு பல்வேறு பகுதிகளுக்கு விஜயம் செய்த அவர் திருக்கோவில் பொலிஸ் நிலையத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த கல்முனை பாண்டிருப்பு பகுதியைச் சேர்ந்த சார்ஜன்ட் அழகரட்ணம் நவீணனின் வீட்டுக்குச் சென்று குடும்பத்தினரைச் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

அழகரட்ணம் நவீனன் மரணமடைந்த சம்பவம் ஒரு துரதிஷ்டவசமான சம்பவம். கிழக்கு மாகாணத்தில் உள்ள மக்களைக் கவலை அடைய வைத்துள்ள சம்பவமாகும். இவ்வாறான சம்பவங்கள் எமது மாகாணங்களில் இடம்பெறுகின்றமை வேதனைக்குரியது.

இவரது குடும்பத்துக்கு அரசாங்கத்தால் எந்தவொரு சலுகை வழங்கினாலும் அல்லது நஷ்டஈடு வழங்கினாலும் அந்தத் தாயிற்குப் பிள்ளையைத் திருப்பி கொடுக்க முடியாது. இதற்குச் சொல்லப்பட்ட காரணங்கள் அவரது தனிப்பட்ட விரோதங்கள் எனக் கூறப்படுகின்றன. அத்துடன் விடுமுறை பிரச்சினை எழுந்தமையால் இச்சூடு இடம்பெற்றதாகச் சொல்லப்படுகின்றது.

புதுக்கதையாக அவர்(சுட்டவர்) மனநோயாளியாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. கிழக்கு மாகாணத்தில் மக்களின் பாதுகாப்பிற்கென மனநோயாளிகளையா வைத்திருக்கின்றீர்கள் என்ற கேள்வியை அரசாங்கத்திடம் கேட்க வேண்டும். சுட்டவரை மனநோயாளியாகச் சித்திரிப்பதன் ஊடாக எமது பிரதேசத்தில் மனநோயாளிகளைக் கடமைக்காக நியமித்துள்ளீர்களா? என்கின்ற கேள்வி எழுகின்றது.

இந்த அப்பாவி சகோதரரின் உயிரை இன்று பலி கொடுத்திருக்கின்றோம். இது போன்று ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலி கொடுத்திருக்கின்றோம். இனி வரும் காலங்களில் இவ்வாறான நிலை நடக்கக் கூடாது. அரசுடன் இணைந்து எமது பகுதியில் செயற் படுபவர்கள் தங்களது வியாபார நோக்கத்துக்காக பொலிஸாரை வைத்திருக்கின்றமையால் இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் பொலிஸார் தவறு செய்தால் தட்டிக் கேட்கும் தைரியம் இவர்களிடம் இல்லை. பொலிஸாருடன் இணைந்து வியாபாரங்களைச் செய்பவர்கள் அவர்கள் விடுகின்ற தவறுகளை எவ்வாறு தட்டிக்கேட்க முடியும். மட்டக்களப்பு மாவட்டத்தில் கூட ஒரு தாயின் காதை அறுத்துச் சென்ற சந்தேக நபர்களை அந்த பிரதேச இளைஞர்கள் தான் பிடித்தார்கள்.

இவ்வாறு தான் கிழக்கு மாகாணத்தில் மோசமான நிலைமை காணப்படுகின்றது. நாங்கள் இந்தக் குடும்பத்துக்கு ஆறுதல் மட்டும் தான் கூறலாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது எந்த சந்தர்ப்பத்திலும் நீதிக்காகப் போராடும் ஒரு கட்சியாகும். இந்த இளைஞர் விடயத்திலும் நீதிக்காகப் போராடுவோம். அவருடன் இறந்த மூன்று சகோதரர்களுக்காகவும் குரல் கொடுப்போம்.

கிழக்கு மாகாணத்திலும் சரி வடக்கு மாகாணத்திலும் சரி சந்திக்குச் சந்தி சோதனைச் சாவடிகளை நிறுவி அப்பாவி மக்களைச் சிரமப்படுத்தி வருகின்றீர்கள். மட்டக்களப்பில் இருந்து யாழ்ப்பாணத்தை நோக்கிப் பயணிப்பதாயின் 28 சோதனை சாவடியைக் கடக்க வேண்டும் என்பது உங்கள் ஒவ்வொருவருக்கும் தெரியும். சோதனைச் சாவடியில் இறக்கி நடக்க வைத்து ஏற்றுகிறீர்கள்.

ஆனால், துப்பாக்கிப் பிரயோகம் செய்த நபர் இரு துவக்கு மற்றும் 500 தோட்டாக்களுடன் மொனராகலை மாவட்டத்துக்கு எவ்வாறு சென்றார். அவர் அங்கு செல்லும் வரை சோதனைச் சாவடியிலிருந்தவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பதைக் கேட்கின்றேன்.

எத்தனை பேரைச் செல்கின்ற வழியில் அவர் சுட்டிருக்கலாம். தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்துகிறோம்



எனச் சிங்கள மக்களுக்குப் பொய்யான வாக்குறுதிகளை வழங்கியுள்ள கோட்டா அரசு அம்பாறை மாவட்டத்திலிருந்து மொனராகலைக்கு தப்பிச்சென்ற துப்பாக்கிதாரியைப் பிடிக்கமுடியாமல் சென்ற பின்னர் என்ன தேசியப் பாதுகாப்பு இங்கு உள்ளது எனக் கேட்க விரும்புகின்றேன்.

ஈஸ்டர் குண்டுத்தாக்குதலை வைத்து ஆட்சிக்கு வந்து இதை தான் செய்கின்றார்களா என்கின்ற சந்தேகமும் எம்முள் எழுந்துள்ளது. தமிழர்களைச் சிரமப் படுத்துவதற்காகச் சோதனைச் சாவடிகளை வைத்துள்ளார்களே தவிர, தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. நாங்கள் இந்த சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இனிவரும் காலங்களிலும் இவ்வாறான விடயங்களை நாங்கள் அனுபவிக்க வேண்டி வரும் நிலைமை உள்ளது. பஞ்சமும் எமது நாட்டில் தலைவிரித்தாடுகின்றது. மக்களுக்கு நாட்டில் சாப்பாடு இல்லை. எதிர்வரும் காலங்களில் நெல்லின் விலை அதிகரிக்கக் கூடும். இனி வீட்டுக்கு வீடு களவு நடக்கப் போகின்றது.

தாய்மார்கள் தங்களது நகைகளை எங்கோ ஒளித்து வைத்து விட்டுத் தான் வாழ்க்கை நடத்த வேண்டிய சூழ்நிலை வரும். ஆகவே, இந்தச் சம்பவத்தை நாங்கள் முழுமையான கவனத்தில் எடுப்போம். நிச்சயமாக நாடாளுமன்றத்திலும் நான் இந்த விடயத்தை எடுத்துக் கூறுவேன். - எனக் குறிப்பிட்டார்.

# மற்றுமொரு இலங்கை இராணுவ அதிகாரிக்கு அமெரிக்கா தடை!

மலேசியாவிற்கான இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகராக இருந்த மேஜர் ஜெனரல் உதய பெரேராவை போர்க்குற்றச் சந்தேக நபராக அமெரிக்கா வகைப்படுத்தியுள்ளது. கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் உதய பெரேரா கிளிநொச்சியில் உள்ள பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் முன்னாள் தளபதியாகவும், இறுதிக்கட்ட ஆயுத மோதலின் போதும் அதன் பின்னரான நடவடிக்கை பணிப்பாளராகவும் பணியாற்றினார்.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் போது, சித்திரவதை, பாலியல் வன்முறை மற்றும் சட்டத்துக்குப் புறம்பான கொலைகள் உள்ளிட்ட துஷ்பிரயோகங்கள் தொடர்பாக இலங்கை இராணுவத்துக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆம் திகதி உதய பெரேராவும் அவரது குடும்பத்தினரும் கொழும்பு - சிங்கப்பூர் ஏர்லைன் விமானத்தில் ஏற முயன்ற போது பயணத் தடை தொடர்பில் அவருக்குத் தெரிவிக்கப்பட்டதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. இவர்கள் சிங்கப்பூரில் இருந்து லாஸ் ஏஞ்சல்ஸுக்குப் பயணம் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும், பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் சிங்கப்பூர் ஏர்லைன் ஊழியர்கள் அமெரிக்க அதிகாரிகளிடமிருந்து எச்சரிக்கையைப் பெற்றோம் என அவரிடம் தெரிவித்தனர்.

கடந்த காலங்களில் அவருக்கு பல நுழைவு விசா வழங்கப்பட்ட போதிலும் தற்போது தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் சந்தன ஹெட்டியாராச்சி மற்றும் சுனில் ரத்நாயக்க ஆகிய இரண்டு இராணுவத்தினர் மீது அமெரிக்கா தடை விதித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது. இலங்கை இராணுவத் தளபதியும் இராணுவத்தின் 58ஆவது பிரிவின் தலைவருமான சவேந்திர சில்வாவுக்கு விதிக்கப்பட்ட பயணத் தடையைத் தொடர்ந்து இந்த தடைகள் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையை வேறு இடத்தில் அமைப்பது தொடர்பில் ஆராய்வு!




திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையில் நிலவும் கடும் நெருக்கடி காரணமாக அந்த வைத்தியசாலையை வேறு இடத்தில் அமைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, வைத்தியசாலையை சத்தாபுர பிரதேசத்துக்கு எடுத்துச் செல்ல அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வைத்தியசாலை வளாகத்தில் போதிய வசதி இல்லாமையாலும், கடல் எல்லையில் அமைந்திருப்பதாலும் பல பிரச்சினைகள் உருவாகியுள்ளன.

இதுதொடர்பான விசேட கலந்துரையாடல் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தலைமையில் சுகாதார அமைச்சில் திங்கட்கிழமை இடம்பெற்றது.

இதன்போது, நிர்மாணப் பணிகளை 3 கட்டங்களின் கீழ் விரைவில் ஆரம்பிக்குமாறு அமைச்சர், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

தற்போதைய நிலைமையில் அங்கு மேலும் கட்டடங்களை அமைப்பதற்கு போதிய வசதி இல்லை எனத் தெரியவந்துள்ளது. இந்த வைத்தியசாலையின் அபிவிருத்திக்காக ஜய்கா செயற்றிட்டத்தின் கீழ் 22 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# தனது மனைவிக்கு நடந்த துயரம் இனி எவருக்கும் ஏற்படக் கூடாது!

## மட்டக்களப்பில் கொலைசெய்யப்பட்ட பெண்ணின் கணவர் தெரிவிப்பு

தனது மனைவிக்கு நடைபெற்றது போன்ற துயரச்சம்பவம் இனியொருவருக்கும் நடைபெறாத வண்ணம் சட்டம் நடவடிக்கையெடுக்க வேண்டும் என அண்மையில் மட்டக்களப்பில் வெட்டிக்கொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவரான க.செல்வராஜா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அரசடி பகுதியில் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டு அவரது தங்க நகைகள் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணைகள் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெற்றன.

மேற்படி சம்பவம் தொடர்பாக வாக்குமூலம் பெறுவதற்காகக் கொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவர் நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டமையுடன், மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.சீ.றிஸ்வான் முன்னிலையில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

இதனிடையே தனது தாயின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களுக்கு மிக விரைவில் தண்டனை வழங்கப்பட வேண்டும் என உயிரிழந்தவரின் மகள் வலியுறுத்தியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## புதுடில்லி புரிய வேண்டியது

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பில் இந்தியத் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. ஒரு முக்கிய விடயத்தைச் சுட்டிக் காட்டியிருக்கின்றார். வரலாற்றோடு ஒட்டி அதனை நாம் நோக்க வேண்டியிருக்கின்றது. இந்திய அரசுத் தலைமைக்குக் காத்திரமான – நுட்பமான – ஒரு கருத்தியலை அவர் எடுத்துரைத்திருக்கின்றார். இலங்கை – இந்திய இராஜதந்திர தொடர்புகளை கடந்த நான்கு தசாப்த காலமாக, நுணுக்கமாக அவதானித்து வரும் நோக்கர்கள் அந்தக் கருத்தியலின் மதிநுட்பத்தைப் புரிந்து கொள்வர்.

அந்த விடயத்தை நாம் உணர்ந்து கொள்வதற்கு முதலில் சரித்திரத்தைச் சற்றுப் பின்னோக்கிப் பார்க்க வேண்டும்.

பெரும் ஊழிப் பிரளயமாக 1983 ஜுலையில் வெடித்த இனக்கலவரம் இலங்கைத் தமிழர் விடயத்திலே தலையிடும் தார்மீகக் கடப்பாட்டையும் பொறுப்பையும் இந்தியப் பெருந்தேசத்துக்கு வழங்கியது. அன்றிலிருந்து இலங்கை விடயத்தில் ஏதோ ஒரு வகையில் தலையீடு செய்து பங்காற்றி வருகின்றது புதுடில்லி.

ஆரம்பத்தில், வெளிப்படையாக மறுத்தாலும், இலங்கைத் தமிழ்ப் போராளிகளுக்கு இந்தியா புகலிடம் – சரணாலயம் – வழங்கியமையோடு, அதற்கு அப்பாலும் சென்று, மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஆயுதங்களையும் வழங்கி, இராணுவப் பயிற்சிகளையும் அளித்தது. ‘தனி ஈழம்’ என்ற பிரிவினை நோக்குடனும் பிரத்தியேக இலக்குடனும் இயக்கங்கள் யாவும் செயற்படுகின்றன என்பதைத் தெட்டத் தெளிவாகப் புரிந்து கொண்டுதான் – முழுமையாக அறிந்து கொண்டுதான் – இந்தப் பயிற்சிகளையும், புகலிடத்தையும் வழங்கி அந்த இயக்கங்களைப் போஷித்து, வழிகாட்டி, நெறிப்படுத்தியது பாரதம்.

அதற்கான நோக்கங்கள், காரணங்கள் என்னவாகவும் இருக்கலாம். அதற்கான வேறுபட்ட விளக்கங்கள், வியாக்கியானங்கள் இப்போது தரப்படலாம். ஆனால் அப்படி பயிற்சி வழங்கப்பட்டு, விடுதலைப் போராட்டம் இந்திய உந்துதலில் உத்வேகம் பெற்றது என்பது மறுக்க முடியாத உண்மை.

அதற்கு நாம் என்ன பிரதியுபகாரம் செய்தோம், என்ன கைமாறு செய்தோம், எப்படி மோசமாகப் பதிலளித்தோம் என்பவை எல்லாம் வேறு விடயங்கள். ஆனால் அப்படி நடந்தன என்பது உண்மை. அந்தப் பின் புலத்தில்தான் சுமந்திரனின் இப்போதைய கருத்து ஒன்றை நோக்க வேண்டும்.

“வழமையாக ஒரு நாடு இன்னொரு நாட்டின் பிரச்சினையில் தலையிட்டால், அந்தப் பிரச்சினை தொடர்ந்து நீடிப்பதையே தலையிடும் நாடு எப்போதும் விரும்பும். நிரந்தரமாகத் தீர்த்து வைக்க விரும்பாது. பிரச்சினை தொடர்ந்து நீடித்தால்தான் தலையிட முடியும், ஈடுபாட்டைத் தொடர்ந்து வைத்திருக்க முடியும் என அது எண்ணும்.

“ஆனால் இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்த நிலைமை முற்றிலும் மாறுபட்டது. இலங்கைத் தீவில், பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டு, அதிகாரப் பகிர்வு ஒழுங்காகத் தமிழர்களுக்கு வழங்கப்பட்டால்தான் வடக்கு, கிழக்கில் சீனர்கள் காலூன்றுவதைத் தமிழர்கள் அடியோடு தடுப்பர். அது நடைபெறும் வரை காணி அதிகாரம், சட்டம் – ஒழுங்கு அதிகாரம் எல்லாம் இலங்கை மத்திய அரசிடமே இருக்கும். அது அப்படி, இருக்கும் வரை வடக்கு, கிழக்கிலும் சீனர்கள் காலூன்றுவதைத் தடுக்க முடியாமல் போகும். அது நீடிக்கும். இதுதான் யதார்த்தம்” – இப்படி சுமந்திரன் கூறியமையின் அர்த்தம் புதுடில்லிக்குப் புரிய வேண்டும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நீதியான தீர்வு இன்னும் தாமதிக்கத் தாமதிக்க, அது இந்தியாவின் பாதுகாப்புக் கரிசனைகளுக்கு சவால் விடும் நிலைமையாக மாறும் என்ற யதார்த்தப் புறவுண்மையைத்தான் சுமந்திரன் சுட்டிக் காட்டுகின்றார்.

இலங்கைத் தேசிய இனப்பிரச்சினையை நீடிக்க இடமளித்த எண்பதுகளின் காலகட்டம் அல்ல இப்போது இருப்பது, புதுடில்லி இதனைப் புரிந்து கொள்வது அவர்களுக்கும் நல்லது, பாதிக்கப்பட்டு அவலப்பட்டு நிற்கும் தமிழர்களுக்கும் நல்லது.

# அமெரிக்காவின் நியூ போர்ட்ரஸ் இலங்கை வந்துள்ளமை பலம்!



### எஸ்.பி.திஸாநாயக்க கருத்து

அமெரிக்காவின் நியூ போர்ட்ரஸ் நிறுவனம் இலங்கைக்கு வந்துள்ளமை நாட்டுக்கு கிடைத்த பலம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அந்த நிறுவனம் நாட்டுக்கு குறைந்த விலையில் எரிவாயுவை வழங்கும் என்பதுடன் மின் விநியோகத்தை குறைந்த கட்டணத்தில் தடையின்றிவழங்கஇணங்கியுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்காபொதுஜனபெரமுனவின் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் எஸ்.பி. திஸாநாயக்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நியூ போர்ட்ரஸ் எனர்ஜி நிறுவனம் எமது நாட்டுக்கு வருவது பலமானது. மின்சாரசபை பெரிய போராட்டத்துக்கு தயாராகி வருகிறது. இந்த நிறுவனம் குறைந்த விலையில் எரிவாயுவையும் குறைந்த கட்டணத்தில் மின்சாரத்தையும் வழங்க இணங்கியுள்ளது.

இப்படியான யோசனைகளையே அந்த நிறுவனம் எமக்கு முன்வைத்துள்ளது. இந்த நிறுவனத்துடன் ராஜபக்ஷவினருக்கு தொடர்பு இருப்பதாகத் தற்போது கூறுகின்றனர்.

அந்த அமெரிக்க நிறுவனத்தின் நிர்வாகத்தில் நிறைவேற்று அதிகாரியாக இருப்பவர் இலங்கையைச் சேர்ந்தவர். அவர் சர்வதேசம் அங்கீகரித்த நிபுணர். அவர் உலகத்துக்கு பல புதியவற்றை உருவாக்கிக் கொடுத்து, காப்புரிமை பெற்றுக் கொண்டவர். அப்படியான ஒருவர் நியூ போர்ட்ரஸ் நிறுவனத்தின் கட்டளை வழங்கும் அதிகாரியாக இருக்கின்றமை இலங்கையர்கள் என்ற வகையில் எமக்கு மிகவும் பெருமைக்குரியது.

எனினும் அவர் ராஜபக்ஷ குடும்பத்தின் உறவினர் அல்லர். இலங்கையில் இருந்த புகழ்பெற்ற விரிவுரையாளர். அவருடன் அமெரிக்க நிறுவனம் இலங்கையில் முதலீடு செய்ய வந்திருக்கின்றமை மிகவும் சாதகமானது எனவும் எஸ்.பி.திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் நியூ போர்ட்ரஸ் நிறுவனமே, இலங்கையில்யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகளில் முதலீடு செய்துள்ளது. அரசாங்கத்துக்குச் சொந்தமான இந்தபங்குகளைவிற்பனைசெய்யும் உடன்படிக்கை அண்மையில் கைச்சாத்திடப்பட்டது.

# நாட்டின் வளங்களை நைஜீரியாவிற்கு கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படும்

### ருவான் எச்சரிக்கை



நைஜீரியாவிலிருந்து கடன் அடிப்படையில் மசகு எண்ணெய்யை இறக்குமதி செய்யவுள்ளதாக ராஜபக்ஷ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த கடனை மீளச் செலுத்த முடியாத நிலைமை ஏற்பட்டால் நாட்டிலுள்ள முக்கிய பகுதிகளை நைஜீரியாவிற்கு விற்க வேண்டியேற்படும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

சிறிகொத்தாவில் கட்சி செயற்பாட்டாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் இந்த நிலைமை தொடர்ந்தால் கடன் பெற்றுக்கொண்ட அனைத்து நாடுகளுக்கும் இலங்கையின் வளங்களைக் கொடுக்க வேண்டிய நிலையே ஏற்படும் என அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, நாட்டில் தற்போது காணப்படும் டொலர் நெருக்கடிக்குத் தீர்வு காண, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தால் மாத்திரமே முடியும் என ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.

# தான்தோன்றித்தனமான நடவடிக்கையில் அரசு!

### கரு ஜயசூரிய காட்டம்



இலங்கைப் பிரஜை ஒருவர் வெளிநாட்டு பிரஜை ஒருவரை திருமணம் முடிப்பதாக இருந்தால் அதற்கு பாதுகாப்பு அமைச்சின் பூரண அனுமதிப் பத்திரம் ஒன்றை பெற்றுக் கொள்ள வேண்டும் என பதிவாளர் நாயகத்தால் சுற்று நிருபம் வெளியிடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டுப் பிரஜைகளின் சுதந்திரத்தை வரையறுப்பதற்காக அரசாங்கம் எடுத்திருக்கும் இந்தத் தீர்மானத்தை மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறேன் என சமூக நீதிக்கான தேசிய அமைப்பின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமானகருஜயசூரியதெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அவர்–

இது அரசாங்கம் எடுத்திருக்கும் தான்தோன்றித்தனமான நடவடிக்கை என்பதுடன் அருவருக்கத்தக்க செயல் என்றும் குற்றம்சாட்டியுள்ளார்.

அரச நிர்வாகம் என்பது அறிவியல் தத்துவங்களின் அடிப்படையில் அமைய வேண்டுமே தவிர, குடும்பங்களின் சாதாரண நிலைமைக்கு சட்டம் அமைக்கும் செயற்பாடு அல்ல என்றும் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கையில் திருமணம் முடிக்கும் சுதந்திரத்துக்கு ஏற்றவகையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இந்த புதிய வரையறை, இலங்கைப் பிரஜைகளை இரண்டு முறைகளில் நடத்துவதற்கான அடித்தளம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# வடமேல் பல்கலை நகர அபிவிருத்தி திட்டம் பிரதமர் தலைமையில் ஆரம்பித்து வைப்பு



அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தின் அனுசரணையில் செயற்படுத்தப்படும் இலங்கை வடமேல் பல்கலைக்கழக நகர அபிவிருத்தி திட்டம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குளியாபிடிய வடமேல் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வில் அலரி மாளிகையிலிருந்து இணைய தொழில்நுட்பம் ஊடாகக் கலந்துகொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் முகமாக நினைவுப் பலகையை திறந்து வைத்தார்.

இந்தத் திட்டத்துக்கான மதிப்பிடப்பட்ட செலவு 2.8 கோடி அமெரிக்க டொலர்களாகும். அந்நிதியை சலுகை கடன் அடிப்படையில் பெற்றுக்கொடுப்பதற்கு அபிவிருத்திக்கான சவுதி நிதியத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

வடமேல் பல்கலைக்கழகத்தின் குளியாபிடிய மற்றும் மாகந்துர வளாகங்களை அடிப்படையாகக் கொண்டு இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

குளியாபிடிய வளாகத்துக்கு 194.2 கோடி ரூபாவும், மாகந்துர வளாகத்துக்கு 197.3 கோடி ரூபாவும் செலவிடப்படவுள்ளதுடன், தற்போதுள்ள பீடங்களுக்கான கட்டடத் தொகுதிகளுக்கான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு மேலும் 26.2 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துடன் வடமேல் பல்கலைக்கழகத்தின் குளியாபிடிய வளாகத்தில் புதிய நூலகக் கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டும் விழாவும் இடம்பெற்றது. அதற்கான செலவு 25.9 கோடி ரூபாவாகும்.

புதிய நூலகக் கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டும் விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜீ.ரத்னசேகர, சமன்பிரிய ஹேரத், இலங்கைக்கான சவுதி அரசாங்கத்தின் தூதுவர் அப்துல் நஸீர் பின் ஹுசைன் அல்-ஹார்தி, அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி சுல்தான் அல் மர்ஷாட், வடமேல் பல்கலைக்கழகத்தின் பதில் துணை வேந்தர் வைத்தியர் சஞ்ஜீவ போவத்த உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நாட்டின் சமூக பொருளாதாரத்துக்கு ஏற்றவகையில் தொழில் ரீதியில் திறமையான பட்டதாரிகளை உருவாக்குவதற்காக பல்கலைக்கழக கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கு கல்வி அமைச்சின் உயர் கல்வி பிரிவினூடாக இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

வடமேல் பல்கலைக்கழக நகர அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் பல்கலைக்கழக சமூகம் மற்றும் சூழவுள்ள சமூகத்தினருடன் நெருக்கமான தொடர்பை மேம்படுத்தல் மற்றும் கிராமிய பிரதேசங்களை பலப்படுத்துவதன் ஊடாக குறிப்பிடத்தக்க அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிகழ்வில் அலரி மாளிகையிலிருந்து கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன, நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, கல்வி அமைச்சின் செயலாளர் சிரேஷ்ட பேராசிரியர் கபில பெரேரா, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க உள்ளிட்ட அரச அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.




## நீர்கொழும்பு – கட்டான பகுதியில் அவசரமாக தரையிறங்கிய விமானம்

விமானத்தின் இயந்திரத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக நீர்கொழும்பு – கட்டான பகுதியில் அவசரமாக தரையிறக்கப்பட்ட விமானத்தில் பயணித்த நால்வர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இரத்மலானையில் இருந்து சிகிரியாவிற்கு சுற்றுலாப் பயணிகளுடன் பயணித்த குறித்த விமானம் கொக்கலை நோக்கி பயணித்த போது இந்த தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் அறிந்த கட்டுநாயக்க விமானப்படையின் மீட்புக்குழு சம்பவ இடத்துக்கு விரைந்தது என விமானப்படை பேச்சாளர் தெரிவித்தார்.

## பூஸ்டர் தடுப்பூசி பெறுவோர் எண்ணிக்கையில் வீழ்ச்சி




கொவிட் பூஸ்டர் தடுப்பூசி பெற்றுக் கொள்வோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சுகாதார மேம்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் ரஞ்சித் பட்டுவந்துதாவ இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் காலம் என்பதால் பூஸ்டர் தடுப்பூசி பெற்றுக் கொள்வோர் எண்ணிக்கையில் வீழ்ச்சியை அவதானிக்க முடிகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒமிக்ரோன் திரிவின் பாதிப்புக்கள் ஒப்பீட்டளவில் குறைவானவை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

டெல்டா திரிவால் ஏற்படும் தாக்கங்களை விடவும் ஒமிக்ரோன் திரிவின் தாக்கங்கள் குறைவானவை என அவர் தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி ஏற்றிக்கொண்டவர்களுக்கு ஒமிக்ரோன் திரிவு தாக்கினால் அந்தளவிற்கு பாதிப்பு ஏற்படுவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பண்டிகைக் காலம் என்பதாலும், தடுப்பூசி ஏற்றியதும் கைகளில் ஏற்படும் வலி காரணமாகவும் பூஸ்டர் தடுப்பூசி பெற்றுக்கொள்வோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது என வைத்தியர் பட்டுவந்துதாவ தெரிவித்துள்ளார்

## மின்சாரம் மற்றும் எரிசக்தித் துறைகளில் பணியாற்றுகின்ற 25 ஆயிரம் பணியாளர்கள் ஒரே தொழிற்சங்க கட்டமைப்பில்!

மின்சார மற்றும் எரிசக்தி துறைகளில் பணியாற்றும் 25 ஆயிரம் பணியாளர்கள் ஒரே தொழிற்சங்க கட்டமைப்புக்குள் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

இந்தப் புதிய கட்டமைப்புக்கு இலங்கை மின்சாரசபையின் பணியாளர் சங்கம் என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் மின்சார சபையை நிதி ரீதியாக பலப்படுத்தல், குறைந்த விலையில் மின்சார உற்பத்தியை ஊக்குவித்தல், மலிவு விலையில் பாவனையாளர்களுக்கு மின்சாரத்தை வழங்குதல், வெளியிட பங்குதரார்களுடன் வலுவான உறவைப் பேணுதல், அதி நவீன தொழிற்பாட்டை அடைதல் போன்ற நோக்கங்களைக் கொண்டு இந்தக் கட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபை பணியாளர்களின் உரிமைகளையும் வென்றெடுப்பது மற்றும் அச்சுறுத்தல்களில் இருந்து காப்பாற்றும் செயற்பாடுகளை இந்தக் கட்டமைப்பு மேற்கொள்ளவுள்ளது. புதிய கட்டமைப்புக்கு பொதுச்செயலாளர்களாக உபுல் சாந்த மற்றும் எஸ்.டி.நிசாந்த ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்தநிலையில் இந்த புதிய கட்டமைப்பு, அரசாங்கங்கள் மின்சாரத்துறை தொடர்பில் எடுக்கும் தனித்தீர்மானங்களின்போது பாரிய சவால்களை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மக்கள் முன் செல்லமுடியாத நிலைமையில் அமைச்சர்கள்!

### சஜித் சாட்டை



நாட்டு மக்களின் வீடுகளிலுள்ள அடுப்புகளில் நெருப்பு எரிவதற்குப் பதிலாக, அவர்களின் மனதிலேயே நெரிப்பு எரிகிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எரிபொருள்களின் விலைகளை அதிகரித்து, சிறந்த நத்தார் பரிசை வழங்கிய அரசாங்கம், கையிருப்பிலுள்ள டொலரைக் கடனாகச் செலுத்தி, புத்தாண்டு பரிசையும் வழங்கவுள்ளது.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

மக்கள் குறைகளைக் கேட்டறியும் 'மனிதாபிமான சுற்றுலா'வின் இரண்டாவது விஜயத்தை அம்பலாந்தொட்டையில் ஆரம்பித்து, மக்களைச் சந்தித்துப் பேசி குறைகளை கேட்டறிந்தது கொண்டபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு –

'குடும்ப ஆட்சியே நாட்டின் அழிவு' எனும் துண்டுப்பிரசுரத்தையும் வழங்கினார். மத்திய வங்கி ஆளுநரே டொலர் மாபியாவின் வஞ்சகர் எனக் கூறிய எதிர்க்கட்சித் தலைவர், அவர் இந்நாட்டு மக்களினதும் ஏற்றுமதியாளர்களினதும் வாழ்க்கையுடன் விளையாடிகொண்டிருக்கின்றார் என்றார்.

நாட்டின் பொருளாதாரத்தை சீரழித்த நபரொருவர் தனது பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளார் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், மொட்டு பொருளாதார சீரழிவின் பிரதான சூத்திரதாரி அவர் என்றும் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் நாட்டின் பொருளாதாரத்தை சீரழித்த குற்றத்தின் பொறுப்பில் இருந்து அவரால் தப்பிக்க முடியாது.

நாட்டுக்கு இந்தளவு சாபத்தை கொண்டு வந்த அமைச்சர்களுக்கு, மக்கள் மத்தியில் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அங்கம் - 235

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**605. இன்று சொல்லப்படும் 'ஒற்றையாட்சி' எனும் சொல்லோ அல்லது 'சமஷ்டி' எனும் சொல்லோ இல்லாமல் அதி கூடிய, உறுதியான, மத்திய அரசினால் மீளப்பெற முடியாத அதிகாரப்பகிர்வு என்பதற்கும், அப்படியான தோற்றங்கள் இல்லாமல் 13ஆம் திருத்தமாக மேற்கொள்ளப்பட்ட அதிகாரப் பரவலுக்கும் என்ன வித்தியாசம்?**


தோற்றங்களும் வார்த்தைகளும் தான். ஆனால் அதிகாரங்கள் கையளிக்கப்படுவதற்கு உண்மையான, இதயசுத்தியான, பெரும்பான்மையின் ஒற்றுமையான மனம் இருக்க வேண்டும். அப்படியில்லாத நிலையில் அதனை அடித்துப் பறிப்பதற்கு பலம் வேண்டும். சொந்த பலம்பற்றாத நிலையில் உதவிகள் தேடிக்கொள்ள வேண்டும். "உண்மையான, இதய சுத்தியான, பெரும்பான்மை ஒற்றுமையான" என்பதை விட்டு தமிழ் மக்களை நீதியாக நடத்த வேண்டும் என்ற எண்ணமாவது இருந்ததா என்று பார்ப்பதற்கு - அந்த நீர்மட்டத்தை அறிவதற்கு - இந்தச் சட்ட மூலங்கள் ஸ்ரீலங்காவின் குடியரசு சட்டத்திற்கு அமைவானதா என்று பரிசீலிப்பதற்காக உயர் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தப்பட்டபோது எழுந்த வாதங்களிலும் தீர்ப்பிலிருந்தும் அறிந்து கொள்ளலாம். இந்த தீர்ப்பில், அதில் நடந்த விவாதங்கள், தீர்ப்பின் விவரம், அவற்றையொட்டி நடந்த, நடக்கும் ஆய்வுகள் பற்றி எழுதுபவை நீண்டு போகலாம். அத்தோடு சட்ட விவாதங்கள் என்பதால் புரிந்து கொள்வது கஷ்டம். ஆகவே மேலோட்டமாக முக்கியமானவற்றைத் தருகிறேன்.

இந்த பாரப்படுத்தலை ஒன்பது(09) நீதியரசர்கள் கொண்ட குழாம் விசாரித்தது. தீர்ப்பும் ஒற்றுமையில்லாமல் மயிரிழையில் ஐந்து பேர் ஆதரவாகவும், நான்கு பேர் எதிராகவும் தீர்ப்பு கூறினர். நீதியரசர் சர்வானந்தா அந்த சமயத்தில் நாட்டின் பிரதம நீதியரசர். அவரே பெரும்பான்மையான 5 பேருக்குமான தீர்ப்பை எழுதினார்.

ஒற்றையாட்சி அரசமைப்பை இயற்றியிருந்த ஒரு நாடு (Unitary Nation) அதன் இறைமை, பௌத்த சாசனத்திற்கு கொடுக்கப்பட்ட முன்னுரிமை என்பன 13ஆம்திருத்தத்தால் பாதிக்கப்படவில்லை. நாடாளுமன்றத்தின் முழுமையான அதிகாரங்களும், சுதந்திரமாக இயங்கக் கூடியவேறு அமைப்புகள் இல்லாத போது ஒரு நாடு, ஒரு அதிகாரம் என்பது உறுதிப்படுத் தப்படுகின்றது.

சமஷ்டி அமைப்பில், அரசின் அதிகாரங்கள் பகிரப்பட்டிருக்கும் - அவை மத்திய அரசாங்கத்துக்கும் மாநில அரசுக்கும் இடையில். ஆனால், ஒன்றுக்கொன்று கீழ் படிவானவை அல்ல. மத்திய அரசு சிலவற்றில் முழு அதிகாரமும், அதே போல் மாநிலம் சிலவற்றில் முழு அதிகாரமும் கொண்டவையாக இருக்கும். இந்த சட்டங்களில் நாடாளுமன்றமும் ஜனாதிபதியும்முழுஅதிகாரம்கொண்டவர்களாக இருக்கின்றமையால் அவர்கள் அதன் அடிப்படையில் அதிகாரத்தை தேர்ந்தெடுத்த வழியில் பகிர்வது அரசமைப்புச் சட்டத்துக்கு முரணாகாது என்பது அவர்களது வாதம்.

இந்த வாதங்களுக்கு ஆதரவாக இருந்த நீதியரசர்கள் பிரதம நீதியரசர் சர்வானந்தாவைத் தவிர, கொலின் தோமி, பாரிந்த ரணசிங்கா, அத்துக்கோறளை, தம்பையா ஆகியோர்.



ஜே.ஆர்.

இந்தத்தீர்ப்பில் தெரிந்த நிதர்சனங்கள், பெரும்பான்மை மக்கள் முற்று முழுதாக ஒற்றையாட்சியில் இருந்து விலகி, எந்தளவு அதிகாரத்தையும் தமிழ் மக்களுக்கு சுதந்திரமாக தர விரும்பவில்லை எனத் தெளிவுபடுத்தியது. ஆகவே தமிழ்மக்கள் தங்களுக்கிருந்த பக்க பலத்துடன் மாகாண சபையை நிர்வகித்திருக்க வேண்டும்.

ஏனெனில் மற்ற நான்கு பேரதும் தீர்ப்பை வனசுந்தரா எழுதியிருந்தார். அவர்கள் 13ஆம் திருத்தம் ஒரு நாடு என்ற எண்ணத்தை அழித்து விடுவதாகவும், முன்னுரிமைகள் கூட பாதிக்கப்பட்டுள்ளன எனவும் வாதிட்டனர். அதிகாரப் பரவல் ஏற்படுத்தப்படுவது நாடாளுமன்றத்துக்கு தரப்பட்ட முழு அதிகாரத்தையும் துறந்து விடுவதாக ஆகும்.

சமஷ்டி என்பதற்கு ஒரு வழிவரைபடம் என்று ஒன்று இல்லை. மத்திய அரசு – மாநில அரசு என்ற கோட்பாடுகளை அறிமுகப்படுத்துவதே அதன் ஆரம்பம்தான்.

இந்தியா ஒரு சமஷ்டி அமைப்பான நாடும்தான். எவ்வளவு இணைந்த அதிகாரங்களை கணக்கெடுத்தாலும் இந்தியா சமஷ்டியாக இயங்குகிறது என்பதை மறுக்க முடியாது. அதுதான் ஸ்ரீலங்காவின் நிலையும். ஆகவே இவை அரசமைப்புச் சட்டத்தை மீறுவனவாக அமைகிறது என்பது இந்தக் குழாத்தின் தீர்ப்பு.

இதில் பங்குபற்றிய நீதியரசர்கள் வனசுந்தர, எல்.எச்.டி.அல்விஸ், ஓ.எஸ்.எம். செனிவரத்தினா, எச்.ஏ.டி.சில்வா ஆகியோர்.

இந்த நீதியரசர்கள் சட்டத்தின் இன்னொரு விளக்கத்தை பிரதிபலிக்கவில்லை. அவர்கள் சிங்கள பெரும்பான்மையின் நிலைப்பாட்டில் அதற்கான ஆதரவுகளை இதனால் தந்தார்கள்.

புத்தியுள்ளான் பலவான் என்பார்கள். தமிழ் மக்கள் புத்திசாதுரியத்திலும் அனுபவதிலும் இந்த பெரும்பான்மையின் போராட்டம், இந்தியாவின் நுழைவுகளை எவ்வாறு பாதிக்கும் எனக் கணித்து இந்தியாவின் அனுசரணைகளைப் பாவித்து, மேலும் அதிகாரங்களை அனுபவித்திருக்கலாம் நடந்தவற்றால் ஜே.ஆரும் பேரினவாதமும் ஒன்றுசேர்ந்து முட்டுக்கட்டைகள் போடத்தொடங்கின.

**606. விடுதலைப் போராட்டத்தை அழிப்பதென்பதில் இந்தியா தீவிரமாகவும் திட்டங்களும் வைத்திருந்ததா?**

இவைஎந்தப்பக்கத்திலிருந்துஇவற்றை பார்ப்பது என்பதைப் பொறுத்தது. விடுதலைப் போராட்டத்தை அழிப்பது என்பது இந்தியாவின் நோக்கமாக இருக்கவில்லை. தனித்தமிழ் ஈழம் அமைப்பதற்கான ஆயுதப்போராட்டத்தை அது அனுமதிக்கத்தயாராகவில்லை. அதைத்தவிர்த்து தமிழ் மக்களுக்காகப் பொருந்தி கொண்டவற்றை நிலையாக்கி, வட கிழக்கை இணைத்து, இந்தியாவின் மாநிலங்களுக்கு இருக்கும் அதிகாரங்களோடுதமிழ் பரப்பாக ஏற்படுத்துவது ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

ஜே.ஆர். முழு அதிகாரங்களும் கொண்ட ஜனாதிபதி அவருக்கு. அரசமைப்பில் இருந்த சர்வ அதிகாரங்களால் தான் அவர் சில அதிகாரங்களை பரவலாக்க வேண்டும் என விட்டுக் கொடுத்தார். கொடுத்த வாக்குறுதிகளின்படி அவற்றை நியாயமாகச் செய்வார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கொடுத்தும், கொடுக்காதது மாக அதிகாரங்களை மாகாண சபையோடு பகிராது, தான் நியமனம் செய்த ஆளுநர் ஊடாகவே தராமலாக்கினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி முறையான, வெளிப்படையான சமஷ்டிக்கு கட்டமைப்புகளை வேண்டியதால் மாகாண சபைகளை ஏற்க முன்வரவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எவ்வுக்கு ஆதரவு தந்தனர். இது மற்ற விடுதலைப் போராளிகளுடன் இரத்தக்களரியை ஏற்படுத்தியது.

விடுதலைப் புலிகளோ இந்தியாவோடு போர்தொடுத்து சுதந்திர தமிழ் ஈழம் என்று முன்னேறினார்கள். தமிழ் மக்களும் பொறுத்தது போதும் எனப் பொங்கி எழுந்து ஆதரவு தந்தனர். இவற்றைப் பாவித்து ஜே.ஆர். பேரினவாதிகளைத் திருப்திப்படுத்த நடவடிக்கைகள் எடுத்தார்.

வட கிழக்கை இணைக்க சம்மதித்ததுக்கும், அதிகாரப் பரவலை ஏற்றுக் கொண்டதற்கும் காரணம் ஆயுதப்போராளிகளின் ஆயுதங்களை இந்தியா களைந்து விடும் என்பதாலேயே. அவை தொடர்ந்தும் ஆயுதங்களை பாவித்து போராடுவதால் வட கிழக்கின் தற்காலிக இணைப்பு முன்னெடுக்கப்படுவது ஆயுதங்கள் களையப் படுவதில் தங்கியுள்ளது என்றார்.



ஷிராணி பண்டாரநாயக்கா

இப்படி எல்லாப் பக்க நியாயங்களையும், இடையில் நடந்தவற்றை எல்லாம் எழுதலாம்.

ஆனால் அவை சரியோ பிழையோ, நடந்து முடிந்துவிட்டன, சம்பவங்கள், சம்பவங்களாக இனப்படுகொலைக்கு வழிவகுத்தவை.

கடைசியாக இந்தியாவே தாங்கள் வளர்த்து தம் மார்பில் பாய்ந்ததாக கருதி கிடாவை அழிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளானார்கள் - சர்வதேச சூழ்நிலைகளால்.

இவை எல்லாவற்றின் மூலமும் சிங்களப் பேரினவாதத்தின் கோரத்தை - கொடூரத்தை - மிகுந்திருந்த கூட்டமைப்பு தலைவர்கள் தெரிந்திருந்தனர். ஆனால், அடுத்து வந்த தேர்தலில் தாம் தனிநாடு என்ற கோரிக்கையை கைவிட்டு விடுவதாகவும், சமஷ்டி என்ற தீர்வைத் தாம் ஏற்போம் எனக் கூறி வெற்றிகளும் பெற்றார்கள்.



சர்வானந்தா

இடையில் ஜனாதிபதியாக இருந்த மஹிந்தராஜபக்ஷநீதிமன்றத்தின்துணையுடன் வட கிழக்கு இணைப்பை துண்டித்திருந்தார். போரின் பின் சோலைமலை வழக்கின் மூலம் மாகாண சபைகளுக்கு காணிகளில் அதிகாரம் இல்லை, அது ஒரு நாட்டுக்கு ஆனதென்ற தீர்ப்பையும் பெற்றார். 'திவிநெகும' சட்டத்தை சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதனால், அது தெரிவு செய்யப்பட்ட எல்லா மாகாண சபைகளுக்கும் அபிப்பிராயத்துக்காகப் பாரப்படுத்தப்பட்டிருக்க வேண்டும், வட பகுதி மாகாணசபை இயங்காததால் இரண்டில் மூன்று பெரும்பான்மை வேண்டும் என பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க, நீதியரசர்கள் அமரதுங்க, சிறீபவன் தீர்ப்பு தந்தார்கள். மஹிந்த ராஜபக்ஷவோ அதனை இரண்டில் மூன்று பெரும்பான்மையோடு நிறைவேற்றினார். ஆக பெரும்பான்மையின் ஆக்கிரமிப்பை எதிர்கொள்ள நாடாளுமன்றமும் சட்டங்களும் உதவுவதில்லை என்ற உணர்வு வேண்டும். ஒரு வழியில் பெரும்பான்மை தாங்கள் நீதியாக மற்றவர்களை ஏற்று உள்வாங்கி இணைந்து நடக்க வேண்டும் என்ற கோட்பாட்டுக்கு வரவேண்டும். அந்த எண்ணப்பாங்கு இப்பொழுதும் வருவதாக தெரியவில்லை. அவற்றை நம்பிக் கொண்டே அந்த ஆதாரத்தில் பாதைகள் சமைப்பது புத்திசாலித்தனமல்ல.

(வளரும்)

# கொலை செய்யும் உரிமை எவருக்கும் கிடையாதாம்!

## சரத் வீரசேகர கூறுகிறார்



பணியில் எவ்வளவு அழுத்தங்கள் இருந்தாலும் தன்னிச்சையாக கொலை செய்ய எவருக்கும் உரிமை இல்லை என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அம்பாறை - திருக்கோவில் பொலிஸ் நிலையத்திற்குள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உயிரிழந்துள்ளமையுடன், மூவர் படுகாயமடைந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

குறித்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் பொலிஸ் சார்ஜன் வீடு செல்வதற்கு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் விடுமுறை கோரியுள்ளதுடன், விடுமுறை வழங்காததால் ஆத்திரமடைந்த பொலிஸ் சார்ஜன் இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார் என விசாரணையில் தெரியவந்தது.

இந்நிலையில்,இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மேற்படி வழக்குடன் தொடர்புடைய பொலிஸ் சார்ஜன் வீடு செல்வதற்கு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் விடுமுறை கோரிய நிலையில்,விடுமுறை கிடைக்காததால் கடும் மன அழுத்தத்தில் இந்த சம்பவத்தை மேற்கொண்டுள்ளார் என அவரது தாயார் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்து தொடர்பில் விசாரணை நடத்தியதில் குறித்த சார்ஜன் அவ்வாறான விடுமுறை எதுவும் கோரவில்லை என ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பணியில் எவ்வளவு அழுத்தங்கள் இருந்தாலும், யாரையும் கொல்லும் உரிமை யாருக்கும் இல்லை என்றும், இந்தச் சம்பவத்தில் பொலிஸார் விலைமதிப்பற்ற நான்கு உயிர்களை இழந்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் பொலிஸ் உயர் அதிகாரி காயமடைந்துள்ளார் எனவும், அவர் குணமடைந்த பின்னர் மேலதிக விவரங்கள் தெரியவரும் எனவும், இந்தச் சம்பவத்தால் தாம் மிகுந்த மனவேதனை அடைகிறேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# காதி நீதிமன்றங்களை இல்லாமலாக்க பரிந்துரைகளை முன்வைக்க கோரிக்கை

## மேல்நீதிமன்ற முன்னாள் பதிவாளர் விடுப்பு



காதி நீதிமன்றத்தை இல்லாதொழிப்பதற்கான பரிந்துரைகளை முன்வைக்குமாறு, மேல்நீதிமன்றத்தின் முன்னாள் பதிவாளரான மொஹமட் சுபைர் என்பவர், ஒரே நாடு; ஒரே சட்டத்துக்கான ஜனாதிபதிச் செயலணியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முஸ்லிம் பெண்களுக்கு நீண்டகாலமாக இழைக்கப்பட்டு வரும் அநியாயத்தைக் கருத்திற்கொண்டே தான் இந்த வேண்டுகோளை முன்வைக்கிறேன் எனவும் மொஹமட் சுபைர் தெரிவித்துள்ளார்.

ஒரே நாடு; ஒரே சட்டம் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் கருத்து சேகரிக்கும் நடவடிக்கை, கண்டி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றபோதே, அவர் அங்கு வருகை தந்து இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

தனிப்பட்ட ரீதியில் தனது கருத்துக்களை முன்வைப்பதற்காகவே தான் இங்கு வந்தேன் எனத் தெரிவித்த சுபைர், நீதிமன்றத் துறையில் தனது 40 வருடகாலச் சேவையின்போது கண்ட வருந்தத்தக்க அனுபவங்களை நினைவிற்கொண்டே இந்தக் கோரிக்கையை முன்வைக்கிறேன் எனவும் கூறினார்.

பல்வேறு தன்னார்வ அமைப்புகள், வெவ்வேறு இனக் குழுக்கள், தொழிற்துறையினர் அமைப்புகள் உள்ளிட்ட சாதாரண பொதுமக்களும் இங்கு வருகை தந்து, செயலணி முன்னால் கருத்துக்கள் மற்றும் யோசனைகளை முன்வைத்தனர்.

முஸ்லிம் விவாகம் மற்றும் விவாகரத்துச் சட்டம் மற்றும் பலதார மணம் போன்றே மதத்தைப் பல பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு அமைப்புகளை நிறுவுதல் போன்ற நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்த வேண்டுமென்றும், ஜனாதிபதிச் செயலணியின் முன் சுபைர் சுட்டிக்காட்டினார்.

காதி நீதிமன்றங்களில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில், நீதிபதியல்லாத காதி ஒருவர் முன்னிலையிலேயே வழக்குகள் விசாரிக்கப்படுகின்றன. அந்தக் காதியினால், சட்டத்துக்கு உட்பட்ட ஆவணங்கள் மற்றும் அவ்வாறல்லாத ஆவணங்களை அடையாளம் கண்டுகொள்ள முடியாத பல சந்தர்ப்பங்கள் காணப்பட்டுள்ளன. அதனால், சரியான புரிதலுடனும் பாரபட்சமின்றியும் சரியான தீர்ப்பை வழங்க முடியாத சந்தர்ப்பங்களைப் போன்றே, நீதிமன்றத் தீர்ப்புகள் அமுலாக்கப்படாத பல சந்தர்ப்பங்களும் ஏற்பட்டுள்ளன. அதனால் இந்த நீதிமன்ற முறைமையை இல்லாதொழிப்பதால், பராமரிப்பு வழக்குகளின் போது பாதிக்கப்பட்ட பெண்ணுக்கும் பெற்றோருக்கும் நியாயத்தைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு உள்ளதென்றும், மொஹமட் சுபைர் எடுத்துரைத்தார்.

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் மூலம் சக்திவாய்ந்த சமூக மற்றும் சட்ட அநீதிகள் நடைபெறுகின்றன என்றும் எடுத்துக்காட்டிய சுபைர், தற்போது காதி நீதிமன்றங்களுக்கு வரும் பராமரிப்பு வழக்குகளை, நீதிவான் நீதிமன்றங்கள் ஊடாகவும் விவாகரத்துக்கான மாவட்ட நீதிமன்றங்கள் ஊடாகவும், நியாயமாகவும் பாரபட்சமின்றியும் தீர்த்துக்கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பலதார மணம் செய்வதற்கான அனுமதியையும் இல்லாதொழிக்க வேண்டுமென்று குறிப்பிட்ட சுபைர், அதற்கான காரணங்களைக் குர்ஆன் வசனங்களை முன்வைத்து விளக்கினார்.

மதம் பிரிக்கப்படக் கூடாது என்று குர்ஆனில் கூறப்பட்டுள்ளது எனத் தெரிவித்த சுபைர், அதற்கான வாய்ப்புகளை அனுமதிப்பதானது, பல்வேறு தீவிரவாத அமைப்புகள் உருவாக வழிவகுக்கும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

‘ஒரே நாடு; ஒரே சட்டம்’ என்ற கருத்தை இலங்கையில் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பல்வேறு தரப்பினரின் ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை ஆராய்ந்து பிரேரணைகளை முன்வைப்பது சங்கைக்குரிய கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையிலான ஜனாதிபதி செயலணிக்கு வழங்கப்பட்ட பொறுப்பாகும்.

இதற்கு முன்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு விஜயம் செய்து, அந்த மாகாணங்களில் வசிக்கும் மக்களின் கருத்துக்களையும் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகள் மற்றும் தனிநபர்களின் கருத்துக்களையும் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அமைந்துள்ள அலுவலகத்தில் வைத்து அந்தச் செயலணி கேட்டறிந்துகொண்டது.

மத்திய மாகாண மக்களின் கருத்துகளைக் கேட்டறியும் பணி, திங்கட்கிழமை நுவரெலியா மாவட்ட செயலகத்தில் முன்னெடுக்கப்பட்டது.

குழுவின் முன் கருத்து தெரிவிக்க விரும்பும் எவரும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு, அதற்கான திகதி மற்றும் நேரத்தை முன்பதிவு செய்து கொள்ளலாம். பின்வரும் முகவரிக்குத் தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ கருத்துக்களைத் தெரிவிக்க முடியும் என குழுவின் செயலாளர், ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திருமதி ஜீவந்தி சேனாநாயக்க தெரிவித்தார்.

குழுவின் உறுப்பினர்களான பேராசிரியர் ஷாந்தி நந்தன விஜேசிங்க, சிரேஷ்ட விரிவுரையாளர் சுமேத வீரவர்தன, சட்டத்தரணி சஞ்சய மாரம்பே மற்றும் பானி வேவல ஆகியோரும் இந்தச் சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

# வெளிப்புற இசை நிகழ்ச்சிகளை நடத்த அனுமதிக்க அறிவுறுத்தல்

## பொலிஸ்மா அதிபர் வழங்கினார்

வெளிப்புற இசை நிகழ்ச்சிகளை நடத்த அனுமதிக்குமாறு பொலிஸ் நிலையங்களுக்கு பொலிஸ்மா அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

இருப்பினும், இதுபோன்ற வெளிப்புற இசை நிகழ்ச்சிகள் சுகாதார வழிகாட்டுதல்களின்படி நடத்தப்பட வேண்டும்.

அதன்படி, திங்கள், செவ்வாய், புதன், வியாழன் ஆகிய கிழமைகளில் இரவு 10 மணி வரையிலும், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் நள்ளிரவு ஒரு மணி வரையிலும், ஞாயிற்றுக்கிழமைகளில் நள்ளிரவு 12.30 மணி வரையிலும் வெளிப்புற இசை நிகழ்ச்சிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# சிலாபத்தில் கோர விபத்து: கணவர் சாவு; மனைவி காயம்!

சிலாபம் பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்த நிலையில் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

புதிதாக திருமணமான தனது மனைவியை காலை பணிக்கு அழைத்துச் சென்ற இளம் கணவனின் மோட்டார் சைக்கிள் திடீரென ஓட்டோவுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் கணவன் சம்பவ இடத்திலேயே பலியான நிலையில் படுகாயமடைந்த இளம் மனைவி சிலாபம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சிலாபம் - குருணாகல் பிரதான வீதியின் கொஸ்வத்தை, பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் 26 வயதுடைய சந்தருவன் என்ற இளைஞனும் 20 வயதுடைய, கனேஷிகா துலாஞ்சலி என்ற பெண்ணுமே விபத்திற்குள்ளாகியுள்ளனர்.

பிங்கிரிய பிரதேசத்தில் இருந்து வேகமாக வந்த ஓட்டோவில் மோட்டார் சைக்கிள் மோதியமையால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஓட்டோ ஓட்டிய 24 வயதுடைய இளைஞன் பிங்கிரிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# கடந்த இரண்டு நாள்களில் வசூலான பெருமளவு பணம்!

## வெளியான தகவல்

இலங்கையில் கடந்த இரண்டு நாள்களில் விலங்கியல் பூங்கா திணைக்களத்துக்கு உட்பட்ட நிறுவனங்களில் 54 லட்சத்து 98 ஆயிரத்து 319 ரூபா வருமானம் கிடைத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கொழும்பு ஊடகமொன்று வெளியிட்டுள்ள செய்தியில் இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்மஸ் பண்டிகை தினமான 25, 26 ஆம் திகதிகளில் இந்த வருமானம் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய,தெஹிவளை மிருகக்காட்சிசாலை, பின்னவலை யானைகள் சரணாலயம் மற்றும் சவாரி பூங்காக்கள் உள்ளிட்ட மேலும் பல நிறுவனங்கள் மூலம் இவ்வாறு வருமானம் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மணல் அகழ்வினை தடுத்து நிறுத்தக்கோரி வெலிக்கந்தை வீதியை மறித்து போராட்டம்!



*மட்டக்களப்பு, டிசெ. 29*

*மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட் பட்ட ஊத்துச்சேனை,வடமுனை மக்கள் வடமுனை - வெலிக்கந்தை வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.*

*வடமுனை, ஊத்துச்சேனை பகுதியில் காடுகளை அழித்து முன்னெடுக்கப்படும் சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்தக்கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.*

*ஊத்துச்சேனை வடமுனை கிராம பொது மக்கள் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.*

*சட்டவிரோத மணல் அகழ்வால் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் மண் அகழ்வு காரணமாக அன்றாடம் பயன்படுத்தும் வீதியில் போக்குவரத்து செய்ய முடியாமலிருப்பதாகவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.*

*பல்வேறு பகுதிகளிலும் லொறிகளில் தினமும் பெருமளவான மண் சட்ட விரோதமான முறையில் அகழப் படுவதாகவும் இதன் போது தெரிவிக்கப்பட்டது.*

# சிலிண்டர் வெடிப்புக்களை தடுக்க சாதனம் கல்முனை மாணவரின் புதிய கண்டுபிடிப்பு!



கல்முனை கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலை மாணவர் ஒருவர் தற்போதைய காலகட்டத்துக்கு மிகவும் அவசியமான உபகரணம் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார்.

தற்போது நாட்டில் பல பாகங்களிலும் எரிவாயு சிலிண்டர் வெடிப்புச் சம்பவங்கள் தொடர்ச்சியாக நடந்த வண்ணமே இருக்கின்றன. இதனால் மக்களின் உயிர் மற்றும் பொருள் சேதங்களுக்குள்ளாகி வருகின்றன.

இதற்குத் தீர்வாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலையில் தரம் 11 இல் கல்வி பயிலும் பாண்டிருப்பைச் சேர்ந்த பத்மநாதன் சுலோஜினிதேவி தம்பதியினரின் புதல்வன் லதேஸ் எனும் மாணவனால் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு நடைபெறாமல் தடுப்பதற்காக காஸ் சேவ் பொக்ஸ் எனும் புதிய கண்டுபிடிப்பொன்றை உருவாக்கியுள்ளார்.

எரிவாயுவின் சிலிண்டரிலிருந்து அதிக எரிவாயு கசிவு ஏற்படும் போது, எரிவாயு அடுப்புக்கள் வெடிக்கின்றன. அடுப்பில் உள்ள சென்சர் மூலம் வெடிப்பதற்கு முன்னரே காஸ் சேவ்ரி பொக்ஸில் உள்ள சிஸ்ரம் எரிவாயுக் கசிவைக் கட்டுப்படுத்துகின்றது.

இதன் மூலம், எரிவாயு அடுப்பு வெடிப்பதை தடுப்பது மட்டுமன்றி மேலதிகமாக கசிவில் உள்ள எரிவாயுவையும் மீதப்படுத்துகிறது. எனவே, இதனால் எந்தவித சேதமுமின்றி பாதுகாப்பாகவும் பயமின்றியும் மக்கள் தங்களது சமையல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் லதேஸ் குறிப்பிடுகையில் –

இதனை இரு வாரங்களாக இரவுபகலாக முயற்சி செய்தேன். எங்கள் கிராமத்திலும் அருகிலுள்ள பல கிராமங்களிலும் எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அதனை நேரில் சென்று அறிக்கை ஒன்றைத் தயாரித்தேன். மேலும் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு செய்திகளையும் சேகரித்து ஆராய்ந்தேன்.

பின்னர் இதற்கான காரணத்தைக் கண்டறிந்தேன். எரிவாயு வெடிப்புச் சம்பவத்தால் மக்களுடைய நாளாந்த நடவடிக்கைகள் மந்தமடைந்தமையையும் மக்கள் அச்சத்துடன் இருக்கின்றமையையும் உணர்ந்து வேதனையடைந்தேன்.

இதற்காக ஒரு கண்டுபிடிப்பை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டேன். எனினும், அடுத்த வருடம் க.பொ.த. (சா/தர) பரீட்சையும் எழுத இருப்பதால், எனது படிப்பு நேரம் தவிர்ந்து, இரவு நேரங்களில் இரு வாரமாக தூக்கமின்றி இதனை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டேன். இதற்கான பொருள்களை ஒன்லைன் மூலம் வாங்கினேன். முதலாவதாக மூன்று சேவ் பொக்ஸ்களை உருவாக்கினேன். அது நூறு வீதம் வெற்றியளிக்கவில்லை.

இறுதியாக இதற்கு முன்னர் உள்ள எரிவாயு வெடிப்பைக் கட்டுப்படுத்தும் திட்டங்களையும் ஆராய்ந்து பரிசோதனையில் ஈடுபட்டேன். இறுதியாக காஸ் சேவ் பொக்ஸ் எனும் ஒரு பாதுகாப்பு அமைப்பை உருவாக்கினேன். அது சிறந்த முறையில் வேலை செய்ய தொடங்கியது. மேலும் இதிலும் சில குறைபாடுகள் உள்ளன. அதனை மேலும் சீர்செய்து சந்தைப்படுத்தல் செய்வதற்குத் தீர்மானித்துள்ளேன்.

இதற்காக எனக்கு வழிகாட்டியாக இருந்த எனது தாய், தந்தை மற்றும் எனது பாடசாலை அதிபர் டிலாசால் அருட் சகோதரர் எஸ். சந்தியாகு சேர் ஆகியோருக்கும், எனது பாடசாலை ஆசிரியரான ரவி சேருக்கும் மேலும் சில தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கிய சோ. வினோஜ்குமார் அண்ணாவுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வாறு தனது அனுபவத்தை பகிர்ந்துகொண்டார். பாடசாலை அதிபர் டிலாசால் அருட் சகோதரர் எஸ். சந்தியாகு சேரால் பாராட்டு விழா ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் பாடசாலை அதிபர் குறிப்பிடுகையில் –

‘இவ்வாறான வெடிப்புச் சம்பவங்கள் மற்றும் விபத்துக்கள் ஏற்படும்போது, அதற்காக உடனடித் தீர்வாக கண்டுபிடிப்புக்களைச் செய்யும் மாணவர்கள் எமது சமுதாயத்தின் பெரும் சொத்துக்கள் ஆவார்கள்.

இந்த மாணவர் இதற்கு முதலும் பல கண்டுபிடிப்புக்களைச் செய்துள்ளார். தனது கற்றல் நடவடிக்கைகளிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வருகின்றார். இவ்வாறான புத்தாக்க சிந்தனை கொண்ட மாணவர்களை ஊக்குவித்து அவர்களுக்கு உதவி செய்வதால் புதிய தொழில் வாய்ப்புகளையும் உருவாக்க முடியும்.

மேலும் நாட்டுக்கு உதவக்கூடிய பல கண்டுபிடிப்புக்களைச் செய்யக்கூடிய பல திறமைகள் அவரிடமுள்ளன. அவரைப் போன்ற மாணவர்களை இவ்வாறு விழாக்களை நடத்தி ஊக்குவித்து வருகின்றோம். இதற்கு முன்னர் இந்தோனேஷியாவில் நடைபெற்ற சர்வதேச கண்டுபிடிப்பாளர் போட்டியில் எமது பாடசாலை மாணவனான முகேஷ் என்பவர் தங்கப்பதக்கம் வென்றார்.’ – இவ்வாறு தனது உரையில் குறிப்பிட்டார்.

மேலும், கண்டுபிடிப்புக்கான ஆலோசனைகள் மற்றும் உதவிகளை வழங்கிவரும் யாழ். பல்கலைக் கழக மாணவனும் இளம் கண்டுபிடிப்பாளருமான சோ.வினோஜ்குமாரால் இந்த மாணவனின் கண்டுபிடிப்புக்கான ஆக்கவுரிமைப் பத்திரம் எடுப்பதற்கு நிதி உதவியும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# லண்டனில் இருந்து வந்த தமிழ்ப் பெண் சடலமாக மீட்பு!

## விசாரணைகள் தீவிரம்

கிளிநொச்சியில் காணாமல் போன பெண், சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் தங்கியிருந்த வீட்டிலிருந்து சுமார் 18 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கந்தப்புரம் பரம்பாலம் பகுதியிலிருந்து சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சடலம் பொதியொன்றில் பொதி செய்யப்பட்டு, வீசப்பட்ட நிலையிலேயே கண்டெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

பிரித்தானியாவில் சில காலம் வாழ்ந்துவிட்டு இலங்கை திரும்பிய பெண் ஒருவர் காணாமல் போயுள்ளார் என அவரது உறவினர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கிளிநொச்சி, உதயநகர் பகுதியில் பெண் தங்கியிருந்த வீட்டில் இரத்தக் கறைகள் காணப்பட்டமையையடுத்து, அவர் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

67 வயதுடைய ஐந்து பிள்ளைகளின் தாயான இவர், பிரித்தானியாவில் சில காலமாக வசித்து வந்தமையுடன், மூன்று வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்கு வந்து தமது சொத்துக்களைக் கவனித்து வந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த திங்கட்கிழமை இரவு 7.20 மணியளவில் குறித்த பெண் காணாமல் போயுள்ளார் என உறவினர்கள் அறிந்துள்ளனர். கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜப்பானியர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு ஏற்பாடு!

ஜப்பான் முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என ஜப்பான் தூதுவர் மிஸிகாஷி ஹய்டியெகீ தெரிவித்துள்ளார்.

இலங்கையர்களுக்கு ஜப்பானில் தொழில் வாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

கண்டி தலதாமாளிகையில் வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களிடம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க கண்டி தலதாமாளிகையில் வழிபாடு செய்ய கிடைத்தமை பெரு மகிழ்ச்சியளிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

ஜப்பானுக்கும், இலங்கைக்கும் இடையில் மிக நீண்டகால உறவுகள் நீடித்து வருகின்றன எனத் தெரிவித்துள்ளார்.

ஜப்பானிய சுற்றுலாப் பயணிகளை அதிகளவில் இலங்கைக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




*சொர்க்கம் திருமணசேவை நிறுவனத்தின் நத்தார் பண்டிகைக் கொண்டாட்டம் அவர்களது யாழ். அலுவலகத்தில் அதன் நிர்வாக உரிமையாளர் சோ.நரேஸ் (கனடா) மற்றும் ஊழியர்களுடன் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது.*

# 13 ஆவது திருத்தம் நீக்கப்படுமானால் நாட்டில் சர்வாதிகார ஆட்சியே நடக்கும்!



## ஜனநாயகப் போராளிகள் கட்சி இடித்துரைப்பு

13 ஆவது திருத்தச் சட்டம் அகற்றப்படுமாக இருந்தால் நிச்சயமாக இலங்கை சர்வாதிகார ஆட்சிமுறைமைக்குள் கொண்டு செல்லப்படும் என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் இ.கதிர் தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் நிலைப்பாடு சம்பந்தமான அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு -

13 ஆவது திருத்தச் சட்டத்தினூடாக மாகாணங்களுக்கு உரிய அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டு மக்களுக்கு இருக்கின்ற அதிகாரத்தையாவது தக்கவைத்துக் கொள்ளுகின்ற நிலைமையை இங்கு உருவாக்க வேண்டும்.

1987 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையில் அரசியல் யாப்பின் ஊடாகக் கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக அரசியற் கட்சிகளின் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள் பலர் கருத்துக்களை முன்வைத்து வருகின்றார்கள்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கருத்தரங்கிலும் பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இதே போன்று 13 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கட்சிகள் பலவும் மற்றும் மலையகம், முஸ்லிம் கட்சிகள் இணைந்து பல சுற்றுப் பேச்சுகளில் கலந்துரையாடி இருக்கின்றார்கள்.

இந்த 13 ஆவது திருத்தச் சட்டம் இலங்கையில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என தற்போது அனைவராலும் பேசப்பட்டு வருகின்றது. இது புதிய விடயம் அல்ல. இருப்பினும் தற்போதைய சூழலில் அது பார்க்கப்படுகின்ற விடயமாக இருக்கின்றது.

அந்த விடயங்கள் தொடர்பாகக் கட்சிகள் கூடி ஆராய்ந்து வருகின்றார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு, 13 ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களுக்கான தீர்வின் ஆரம்ப விடயம் என்பதைத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது.

இதில் 13 ஆவது திருத்தச் சட்டம் என்பது என்ன? அதனை நடைமுறைப்படுத்துகின்ற போது அதிலுள்ள சாதக, பாதக விடயங்கள் என்ன? என்பதோடு இந்த விடயத்தில் எல்லோருடைய கருத்துக்களுக்கும் செயற்பாடுகளுக்கும் எந்தளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பது தொடர்பிலும் நாங்கள் ஆராய்ந்து வருகின்றோம்.

உண்மையில் 13 ஆவது திருத்தச் சட்டம் என்பது இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஓர் ஆணிவேராகவே பார்க்கப்படுகின்றது. இது இந்தியாவால் இலங்கை மீது போட்டிருக்கும் ஒரு கடிவாளமாகவே இருக்கின்றது. 13 ஆவது திருத்தச் சட்டம் இலங்கையின் அரசமைப்பில் கொண்டு வரப்பட்டு இன்றுவரை நடைமுறையில் இருந்தாலும் நிர்வாக அலகுகளுக்கு வழங்கப்பட வேண்டிய அதிகாரங்கள் இதுவரை வழங்கப்படவில்லை.

தமிழர்களைப் பொறுத்தவரையில் ஆயுதப் போராட்ட காலத்திலும் சரி தற்போதும் சரி நாங்கள் எமது உரிமைகளை வென்றெடுப்பது தொடர்பில் ஆயுத ரீதியாகவும், தற்போது அரசியல் ரீதியாகவும் பலசுற்றுப் பேச்சுகளை முன்னெடுத்திருக்கின்றோம். நோர்வே ஒஸ்லோவில் இடம்பெற்ற தீர்மானம், திம்புவில் இடம்பெற்ற தீர்மானம் இவை இரண்டும் எமது ஆயுதப் போராட்ட காலத்தில் இடம்பெற்றன.

இவை இரண்டுமே பரஸ்பரம் நம்பிக்கையிழந்து செயலிழந்து நிற்கின்றன. நாங்கள் ஒவ்வொரு முயற்சிகளும் எடுக்கின்ற போது அக்காலத்தில் இதனால் எத்தகு விளைவுகள் எற்படும் என்பதை ஆராய்ந்து அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கேற்றவாறு எமது திட்டங்களை வகுத்து நாம் செயற்பட்டே வந்தோம்.

உண்மையில் ஒஸ்லோ உடன்படிக்கையின் அடிப்படையில் ஒரு தீர்வைப் பெறுவதற்கான முயற்சி நடைபெற்றது அது இடைநடுவில் கைவிடப்பட்டது. சுமார் ஐந்து ஆண்டுகளாக உலக வல்லமை மிக்க நாடுகளின் அனுசரணையுடன் பேச்சுகள் இடம்பெற்றன. அந்தப் பேச்சுக் காலங்களில் எல்லாம் தமிழர்களுக்கு சுயநிர்ணய அடிப்படையில் உரிமை வழங்கப்பட வேண்டும். தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்பதை அங்கீகரித்துக் காட்டக்கூடியவாறான செயற்பாடுகள் பெரிய அளவில் இடம்பெறவில்லை. உலக நாடுகள் இலங்கை அரசாங்கத்துக்கு இவ்வாறாக அழுத்தம் கொடுக்கவில்லை. இலங்கையின் ஏமாற்று வித்தைகளை உலகம் நம்பி அந்த வழியில் பயணித்தமையால் அந்தப் பேச்சு அவ்வாறே கைநழுவிச் சென்றது.

அதேபோன்று, டோக்கியோ மாநாட்டிலே நாங்கள் பங்குபற்றினால் என்ன விளைவுகள் ஏற்படும் பங்குபற்றாமல் விட்டால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதையும் முற்கூட்டியே எமது தலைவர்கள் அறிந்திருந்தார்கள்.

அந்த நிலையிலே டோக்கியோ மாநாட்டிலே விடுதலைப் புலிகளின் சார்பில் யாரும் பங்கேற்காமல் போனதும் ஆயுதப் போராட்டத்தின் பின்னடைவிற்கு ஒரு காரணமாக அமைந்தது. அதேபோன்று இன்றைய சூழலில் தமிழ் மக்களின் நலன் சார்ந்த விடயங்களில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மிகத் தெளிவாக விளங்கிச் செயற்பட வேண்டும்.

ஒவ்வொரு கால கட்டத்திலும் நாங்கள் நம்பிக்கையோடும், உலகத்தின் அனுசரணையுடனும் பேச்சுகளிலே ஈடுபட்டோம். தற்போது இந்த 13 ஆவது திருத்தச் சட்டத்தை இந்தியாவின் அனுசரணையுடன் முழுமையாகச் செயற்படுத்துவதற்கு தமிழக் கட்சிகள் முன்வந்து செயற்படுகின்றார்கள்.

தற்போது நாட்டில் ஆட்சியில் இருக்கின்ற இந்த அரசாங்கம் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக இல்லாதொழிப்பது அல்லது அதனைச் செயலிழக்க வைப்பது போன்ற நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது.

அதற்காகத் தான் புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றது. அவ்வாறு புதிய அரசமைப்பின் ஊடாக 13 ஆவது திருத்தச் சட்டம் இல்லாதொழிக்கப்படுமாக இருந்தால் நிச்சயமாக இலங்கை அரசாங்கம் எமது சுயநிர்ணயக் கொள்கை, தமிழர்களின் தேசியம் அனைத்தையும் மிக வேகமாக அழித்து இங்கே தமிழ் மக்களுக்கான தேசிய இனப்பிரச்சினை இல்லை என்பதை உலகத்துக் குக் காட்டி தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து தனிச் சிங்களப் பௌத்த நாடாக மாற்றுவதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன.

இந்த விடயங்களில் நாங்கள் மிக நிதானமாகச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். 13 ஆவது திருத்தச் சட்டம் முற்றுமுழுதாக பிடுங்கி எறியப்படுமாக இருந்தால் இலங்கை சீனாவின் பக்கம் முழுமையாகச் சாய்ந்து விடும்.

இந்தியாவின் உதவியைக் கோரி நிற்கும் தமிழர் தரப்பு நிச்சயமாகத் தோல்வி அடைவதற்கான வாய்ப்புகளே அதிகமாக இருக்கின்றன. 13 ஆவது திருத்தச் சட்டத்தைத் தாண்டி எம்மால் போக முடியாத நிலை இருந்தாலும். அதன் கீழ் போகாமல் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவையும் எமக்கு இருக்கின்றது.

இந்தத் திருத்தச் சட்டம் முழுமையாக அமைய வேண்டுமாக இருந்தால் அதற்குப் பிரதான பங்காளியாக இருக்க வேண்டியது இந்தியா. இந்தியாவின் நலன் சார்ந்த விடயங்களில் ஈழத்தமிழர்கள் பயன்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்றால் நிச்சயமாக இந்தியா ஈழத்தமிழர்களின் நலனிலே மிகவும் அவதானமாகவும், நம்பிக்கையைப் பேணும் வகையிலும் செயற்பட வேண்டும்.

அவ்வாறான ஒரு நிலை ஏற்படுமாக இருந்தால் நிச்சயமாக 13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக இருக்கின்ற எமது அதிகாரங்களையென்றாலும் தமிழர் தரப்பு கைப்பற்றக் கூடிய வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன. அந்த வகையில் தற்போதைய நிலையில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமையே இங்கு இருக்கின்றது.

13ஐ நாங்கள் நிராகரிக்க முயற்சி செய்வோமாக இருந்தால் இந்தியாவால் இலங்கை மீது போடப்பட்டிருக்கின்ற கடிவாளம் அறுத்தெறியப்படும். அதன் பின்னர் இலங்கை அரசாங்கத்தின் நில ஆக்கரமிப்புகள், பௌத்தமயமாக்கல் திட்டங்கள் போன்ற அனைத்து விடயங்களும் மிக இலகுவாக இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும்.

13 ஐத் தாண்டி எமது மக்களுக்கான உரிமைகளை வழங்குவதாக இலங்கையில் தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறிய கருத்து இந்த விடயங்களுக்குள் உள்வாங்கப்பட வேண்டிய தேவை இருக்கின்றது.

ஏனெனில் வடக்கு, கிழக்கு பகுதியில் சிங்களக் குடியேற்றம் முழுமையாக நிறைவேற்றப்படுமாக இருந்தால் வடக்கு கிழக்கில் தமிழர்களின் பிரதிநித்துவம் குறையும், சிங்களப் பிரதிநிதிகள் அதிகமாகத் தெரிவு செய்யப்படக் கூடிய வாய்ப்பு உருவாகும். அந்த நிலைமை தோற்றுவிக்கப்பட்டதன் பின்னர் எவ்வகையான அதிகாரங்கள் வடக்கு, கிழக்கிற்கு பகிரப்பட்டாலும் அது எமக்குத் தேவையற்றதாகவே அமையும்.

இன்று வடக்கு, கிழக்கில் சீனாவின் பிரவேசம், ஆதிக்கம், அபிவிருத்தி என்ற போர்வையில் சீனாவினால் ஆக்கிரமிக்கப்படும் நிலங்கள் போன்றன தொடர்பிலும் நாம் சிந்திக்க வேண்டும். இலங்கையில் தன்நிறைவுப் பொருளாதாரம் அமைவதற்கு சீனா ஒருபோதும் அனுமதிக்காது. விலை கொடுத்து இலங்கை நாட்டை வாங்கிக் கொள்வதற்காகவே சீனா முயற்சி செய்கின்றது.

அந்த முயற்சியில் சீனா ஈடுபடுகையில் சீனாவைப் பயன்படுத்தி தமிழர்களுக்கெதிராக தங்களுடைய திட்டங்களை நிறைவேற்ற சிங்கள தேசம் அறிவிலித்தனமாக செயற்படுகின்றது. உண்மையில் தமிழ் மக்களுக்கான தீர்வாக வடக்கு - கிழக்கு இணைந்த தம்மைத் தாமே ஆளக்கூடிய ஓர் அலகை வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் எக்காலத்திலும் முயற்சி செய்ததும் இல்லை, முயற்சி செய்யப் போவதும் இல்லை.

தமிழர்களுக்கு இவ்வாறானதொரு தீர்வுத் திட்டத்தைத்தான் வழங்கப் போகின்றோம் என்று சொல்லி தமிழர் தரப்பைப் பேச்சுக்கு அழைத்ததும் இல்லை. நாங்கள் எங்கள் கொள்கைக்கு அமைய இலங்கை அரசாங்கத்தோடு வலுக்கட்டாயமாகவே பேச்சுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். நீண்டகாலம் கிடப்பிலே கிடந்த இந்த 13 ஆவது திருத்தச் சட்டத்தை நாங்கள் இன்று கதைத்துக் கொண்டிருக்கின்றோம்.

13 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு தமிழர்களின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து ஒரு நேரிய பாதையிலே பயணித்தால் மாத்திரமே அதனை நடைமுறைப்படுத்தலாம் என்ற விடயம் உணரப்பட்டு இன்று சில முன்னெடுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெடுப்புகளும் மக்களை ஒரு குழப்பகரமான நிலைமைக்கு இட்டுச் செல்லுகின்றதே தவிர ஒருமித்து ஒரு கொள்கையின் அடிப்படையில் எமது மக்களைப் பயணிக்கக் கூடியவாறான முன்னெடுப்புகளாக அமையவில்லை.

நாங்கள் பல கூட்டங்களைக் கூடி கதைப்பதற்கு முன்னர் நாங்கள் எங்களை மாற்றிக் கொண்டு சரியான முடிவுகளை எடுக்கக் கூடிய நிலைப்பாட்டை உருவாக்கிக் கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது. தமிழ்த் தேசியம் பேசிக் கொண்டு தமிழ்த் தேசியத்துக்கு வெளியில் நின்று செயற்படுகின்ற கட்சிகளும், 13 ஆவது திருத்தச் சட்டம் தேவையற்ற விடயம் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஒருசாராரும் இருக்கின்றார்கள்.

13 ஆவது திருத்தச் சட்டம் ஈழத் தமிழர் நலன்சார்ந்த விடயங்களுக்கு மட்டும் கொண்டுவரப்பட்ட விடயம் அல்ல என்பதைத் தெளிவாக நாங்கள் புரிந்துகொள்ள வேண்டும். 13 ஆவது திருத்தச் சட்டம் அகற்றப்படுமாக இருந்தால் நிச்சயமாக இலங்கை சர்வாதிகார ஆட்சிமுறைமைக்குள் கொண்டு செல்லப்படும். பெரும்பான்மை சமூகம் என்று சொல்லப்படுகின்ற சிங்களத் தரப்புகளால் ஒருமித்த ஓர் ஆட்சியைக் கொண்டு வரலாம்.

பிரிக்கப்பட்ட மாகாணங்களில் காணி பொலிஸ் அதிகாரங்களை நிலை நிறுத்தியவாறு ஓர் அரசமைப்பில் சட்டமொன்று கொண்டுவரப்பட்டுள்ளது என்று சொன்னால் தற்போதைய நிலைமையில் அதனை நாங்கள் ஏற்று முன்கொண்டு செல்ல வேண்டிய நிலைமை தான் இருக்கின்றது. அது தமிழ் மக்கள் சார்ந்து தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கும் ஒவ்வொரு அரசியல் தலைவர்களும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

தற்பொது எங்களுக்கு இருக்கின்ற பலம் என்று சொல்லப்படுகின்ற அந்த விடயத்தை நாங்கள் எவ்வாறு கையாளமுடியும் என்று பார்க்க வேண்டும்.

அதனைக் கொண்டு வந்து விட்டால் போதுமென்று இருக்காமல் அதனை எவ்வாறு எமக்குச் சாதகமாக பலம் மிக்க நிர்வாக அலகாக மாற்ற முடியும் என்பது பற்றிக் கலந்தாலோசித்து இந்திய அரசாங்கத்தோடு பேச்சுகளில் ஈடுபட்டு 13 ஆவது திருத்தச் சட்டத்தினூடாக மாகாணங்களுக்கு உரிய அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டு மக்களுக்கு இருக்கின்ற அதிகாரத்தையாவது தக்கவைத்துக் கொள்ளுகின்ற நிலைமையை இங்கு உருவாக்க வேண்டும்.

எந்தப் பலமும் இல்லாமல் நாங்கள் ஒரு விடயத்துக்குள் பயணிக்க நினைப்பது நிச்சயமாக எதிர்காலத்தில் மீண்டும் ஓர் அழிவினையே ஏற்படுத்தும். வரலாற்று ரீதியில் நாங்கள் தமிழ் மக்களின் விடுதலை தொடர்பான விடயங்களில் அவதானித்துக் கொண்டே வருகின்றோம்.

எமது கருத்துகளும் செயற்பாடுகளும் ஒருமித்த பாதையில் ஒரே கொள்கையில் உண்மையாகவும் நேர்மையாகவும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# ஒருவர் தனது சுயநிர்ணய உரிமையைக் கோரினால் இந்த நாட்டில் அவர் பயங்கரவாதி ஆக்கப்படுகின்றார்!

## குற்றவியல் பிரிவினருக்கு விக்கி இடித்துரைப்பு



இந்த நாட்டு அரசாங்கம் மதம், இனம் சார்ந்த உரிமையை ஒருவர் கோரினால் அவரைப் பயங்கரவாதி என்று முத்திரை குத்துகின்றது. ஒரு நபர் தனது சுயநிர்ணய உரிமையை வலியுறுத்துவாரானால் இலங்கை அரசால் அவர் பயங்கரவாதி ஆக்கப்படுகின்றார்.

– இவ்வாறு நதீக தர்ண வேரதூவ என்பவரின் 22.10.2020 ஆம் திகதிய முறைப்பாட்டுக்கு பதில் அளிக்கும் விதமாக கொழும்பு குற்றவியல் பிரிவு பொலிஸ் பரிசோதகர் ப்ரேமவர்தனவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் வாக்குமூலம் கொடுத்தார். அவரது வாக்குமூலத்தின் முழுமையும் வருமாறு –

எனக்கு வயது 83. நான் 2020 ஆம் ஆண்டில் ஒகஸ்ட் மாதத்தில் நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். நான் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த பின்னர் தான் குறிப்பிட்ட செவ்வி நடைபெற்றது. தெரண ஊடகத்தின் 'மொகத உணே' என்ற நிகழ்ச்சிக்கு என்னிடம் கேள்விகள் கேட்கப்பட்டன. கேட்டவரின் பெயர் எனக்கு ஞாபகமில்லை. எப்பொழுது கேட்கப்பட்டேன் என்பதும் ஞாபகமில்லை. கேட்ட கேள்விகளுக்குப் பதில் அளித்தேன். நடந்தவற்றின் a Cop ஐப் பார்த்தால்த்தான் செவ்வி பற்றி ஏதாவது கேள்விகளுக்கு நான் பதில் அளிக்க முடியும்.

ஹிரு ஒளிபரப்பின் 'ஹாட் டோக்' நிகழ்ச்சியின் செவ்வியானது என் கொழும்பு வீட்டில் நடைபெற்றது. குறித்த கேள்வி – பதில் நிகழ்வு ஒரு மணித்தியாலத்துக்கு அதிகப்படியான நேரத்திற்கு நடைபெற்றது. ஆனால் ஒளிபரப்பப்பட்ட 'ஹாட் டோக்' நிகழ்ச்சி 10, 12 நிமிடங்களுக்கே தணிக்கை செய்து ஒளிபரப்பப்பட்டது. ஆகவே ஒரு மணித்தியாலத்துக்கு மேல் என்னிடம் கேள்வி கேட்டு பதிவு செய்த பின் தமக்குத் தேவையான பகுதிகளையே ஒளிபரப்பினார்கள். இரண்டு பதிவுகளையும் பார்த்த பின்னரே என்னால் செவ்விகள் பற்றி கருத்து வெளியிட முடியும்.

ஆனால் தாமதிக்காமல் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளிப்பேன். அவையாவன தமிழ் மொழியே இலங்கையின் ஆதி மொழி என்றது.

என் கருத்து: இலங்கையின் ஆதிக் குடிகள் பேசிய மொழி தமிழ் மொழியே. சிங்கள மொழி அண்மைய மொழியொன்று. கி.பி. 6 ஆம், 7 ஆம் நூற்றாண்டுகளில் தான் குறித்த மொழி பாவிப்புக்கு வந்தது. இது ஒரு சரித்திர ரீதியான உண்மை. எனது பொது இளமாணிப் பரீட்சைக்கு நான் வரலாறை ஒரு பாடமாக எடுத்திருந்தேன். அரசியல் யாப்பின் 14 ஆவது உறுப்புரையின் படி இவ்வாறான எனது கருத்தை வெளிப்படுத்த எனக்கு உரிமையுண்டு.

நான் மகாவம்சத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்பது….

என் கருத்து: மகாவம்சத்தை இல்லை என்று எவரும் கூற முடியாது. ஆனால் அந் நூல் பௌத்த மதத்தைப் பெருமைப்படுத்துவதற்காக எழுதப்பட்ட கட்டுக்கதை. இதனை அதன் ஆசிரியரே ஒவ்வொரு செய்யுளின் அந்தத்திலும் குறிப்பிட்டுள்ளார். அது ஒரு கட்டுக்கதை என்பதால் அதன் பொருளடக்கத்தை வரலாற்று ரீதியான சான்றுகள் என்று கொள்ளமுடியாது. அந்த நூல் பாளி மொழியில் பௌத்த மதத்தைப் பெருமைப்படுத்த எழுதப்பட்ட ஒரு கட்டுக்கதையே என்பது தான் என்னுடைய தற்போதைய கருத்துமாகும். அரசியல் யாப்பின் உறுப்புரை 14 இன் கீழ் இவ்வாறான எனது கருத்தை வெளியிட எனக்கு கருத்துச் சுதந்திரம் உண்டு.

எல்.டி.டி.ஈ. என்பது ஒரு பயங்கரவாத இயக்கமல்ல. இலங்கை அரசாங்கங்களே அவர்களை ஆயுதமேந்த வைத்தார்கள் என்பது….

என் கருத்து: தமிழீழ விடுதலைப் புலிகள் என்பவர்கள் சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்த்து தமிழர்களின் விடுதலைக்காகப் போராடிய தமிழ் இளைஞர்களின் ஒரு விடுதலை இயக்கத்தினர் ஆவர். பிரிட்டிஷாரை எதிர்த்து இந்திய சுதந்திரத்துக்காகப் போராடிய சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் சேனை அணியைப் போன்றவர்கள் . பின்வரும் நிகழ்வுகள் நிகழ்ந்திருக்காவிட்டால் அரச படைகளை எதிர்க்க எமது இளைஞர்கள் ஆயுத மேந்தியிருக்கமாட்டார்கள்.

திட்டமிட்டு தமிழ் மக்களின் பூர்வீக இடங்களில் வடக்கு, கிழக்கிற்கு அப்பால் வெளியிடங்களில் இருந்து மக்களைக் கொண்டு வந்து குடியேற்றியிருக்காவிட்டால்.

'சிங்களம் மட்டும்' சட்டத்தை இயற்றியிருக்காவிட்டால்.

உயர் கல்வியில் சமநிலைப்படுத்தல் என்ற ஒரு கொள்கையைப் புகுத்தியிருக்காவிட்டால்.

1958 இல், 1983 இல் மேலும் வேறு காலகட்டங்களில் வெறித்தனமான கலகங்களை தமிழர்களுக்கு எதிராக ஏற்படுத்தி குழந்தைகள், இளைஞர்கள், வயோதிபர் என்று பார்க்காது முரட்டுத்தனமாக அவர்களைக் கொன்று குவித்ததுமல்லாமல் பெண்களை வன்புணர்ச்சிக்கு உட்படுத்தாது இருந்திருந்தால்.

யாழ் நூலகத்தை எரிக்காது இருந்திருந்தால்.

வடக்கு, கிழக்கை இராணுவமயமாக்காது இருந்திருந்தால்.

ஆயுதமேந்தியவர்களில் சிலர் பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கும் பொறியியல் பீடத்துக்கும் பரீட்சைகளில் தேர்வானவர்கள்.

பல்வேறு இலங்கை அரசாங்கங்கள் பல தடவைகள் விடுதலைப் புலிகளுடன் உத்தியோகபூர்வ பேச்சுகளை நடத்தியிருந்தன. இலங்கை அரசாங்கங்கள் விடுதலைப் புலிகளை கொழும்பு உட்பட நாட்டின் பல்வேறு இடங்களுக்குப் போகவிட்டு தங்கியிருக்க அனுமதித்தனர். 2002 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை அரசாங்கம் நீக்கியது.

1980 இன் இறுதி ஆண்டுகளில் இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் கையளித்தனர் என நான் பத்திரிகைகளில் வாசித்திருந்தேன்.

ஆகவே, காலத்துக்குக் காலம் தமது நன்மைக்காக இலங்கை அரசாங்கங்கள் விடுதலைப் புலிகளின் இயக்கத்தை ஒரு பயங்கரவாத இயக்கமாக அடையாளப்படுத்தி விட்டு தமக்கு நன்மைபெற வேறு தருணங்களில் குறித்த அடையாளத்தைக் கைவிட்டு வந்துள்ளனர். இதுவே, குறுகிய நெடிய நினைவுமட்டங்களில் மக்கள் மனதில் ஒரு மயக்கத்தை ஏற்படுத்தி வந்துள்ளது.

இலங்கை அரசாங்கங்கள் 'பயங்கரவாதி' என்ற சொல்லை தமது கருத்துக்களுக்கு முரணானவர்களை அழைக்கும் ஒரு பதமாகப் பாவித்து வருகின்றார்கள். இலங்கை அரசுதான் ஒருவரைப் பயங்கரவாதி என்றும் சாமானியர் என்றும் பாகுபடுத்துகின்றது. தமது சுயநிர்ணய உரித்தை ஒருவர் வலியுறுத்துவது அரசாங்கத்திற்குப் பிடிக்கவில்லை என்றால் உடனே அவரைப் பயங்கரவாதி என்று அடையாளம் காட்டுவார்கள். ஒருவரின் மதம் சம்பந்தமாக அரசாங்கத்தினர் வெறுப்பு கொண்டால் உடனே அந்த மத அலகின் உறுப்பினர்களைப் பயங்கரவாதிகள் என்று பச்சை குத்திவிடுவார்கள்.

கெப்பெட்டிபொல திசாவை என்பவர் பிரித்தானியர்களால் பயங்கரவாதி / பயங்கரகுற்றவாளி என்று அடையாளப்படுத்த, எம் நாட்டு மக்களால் விடுதலைவீரர் என்றும் தீரன் என்றும் அழைக்கப்பட்டு போற்றப்பட்டார். தொடர்ந்து வந்த இலங்கை அரசாங்கங்களின் இரக்கமற்ற, குரூரமான நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடிய விடுதலை வீரர்களே விடுதலைப் புலிகள். உண்மையில் பயங்கரவாதிகள் என்ற பதம் இலங்கை அரசாங்க படையினருக்கே பொருந்தும்;.

பெரும்பான்மையான வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று அடையாளப்படுத்தமாட்டார்கள். அரசாங்கங்களும் ஒரு சில சிங்கள மக்களுந்தான் அவர்களை அவ்வாறு அடையாளம் காட்டுவார்கள்.

இலங்கை அரசியல் யாப்பின் உறுப்புரை 14 இன் கீழ் மேற்படி எனது கருத்துக்களை வெளியிட எனக்கு பூரண உரித்துண்டு.

முள்ளிவாய்க்காலில் ஒரு லட்சத்துக்கும் மேலான பொது மக்கள் அரச படையினரால் கொல்லப்பட்டார்கள் என்பது…

என் கருத்து: இது ஓர் உண்மை. பாதுகாப்பு பிரதேசங்கள் என்று அரசின் முகவர்களால் அடையாளப்படுத்தப்பட்டு பொதுமக்கள் அங்கு ஆற்றுப்படுத்தப்பட்டு அவர்கள் மீது குண்டுகள் போடப்பட்டன. மக்களுக்குச் சென்றடைய வேண்டிய உணவு மருந்துவகைகள் என்பன வெகுவாகக் குறைக்கப்பட்டு பலர் பட்டினியாலும் நோய்களாலும் செத்துமடிய இடமளிக்கப்பட்டது. ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டனர் என்பதற்கு சான்றுகள் பல உள்ளன.

2011 இல் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பாங்கி மூனின் நிபுணர்கள் குழு சுமார் 40 ஆயிரம் பொது மக்களாவது மடிந்தார்கள் என்றது. 2012 இல் ஐக்கிய நாடுகளின் உள்ளக அறிக்கைகள் 70 ஆயிரம் பொதுமக்களாவது மடிந்தனர் என்றன. ஒரு சர்வதேச விசாரணையே உண்மையை முழுமையாகக் வெளிக்கொண்டு வர முடியும். எனினும் முல்லைத்தீவு மாவட்டத்தினுள் நுழைந்தவர்கள் தொகையையும் அங்கு முன்னர் வாசகஞ் செய்த மக்களின் தொகையையும் கூட்டி அதில் இருந்து தப்பியவர்களின் தொகையைக் கழித்தால் ஒரு லட்சத்திற்கும் அதிகமான ஒரு தொகையையே அது வெளியிடும்.

அரசியல் யாப்பின் உறுப்புரை 14 இன் கீழ் எனது கருத்துரிமை அடிப்படையில் இந்தக் கருத்துக்களை வெளியிட எனக்கு உரிமை உண்டு.

படையினர் பொது மக்களைக் கேடயமாகப் பாவித்தார்கள் என்பது…

எனது கருத்து: அவ்வாறு கூறினேன் எனக்கு ஞாபகமில்லை. செவ்வி பற்றிய காணொலியைப் பார்த்தால்தான் நான் இதற்குப் பதில் அளிக்கமுடியும்.

பலாத்காரமாக புத்தர் சிலைகள் வடக்கில் அமர்த்தப்படுகின்றன என்பது…

என் கருத்து: இது ஓர் உண்மை. சிலருக்கு எதிராக வழக்குகளும் பதியப்பட்டுள்ளன. நான் முதலமைச்சராக இருந்த போது இவ்வாறான வழக்குகள் பற்றி எனக்குத் தெரியவந்தன. முழு விவரங்களும் உரிய அலுவலர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள முடியும். இது பற்றிய எனது கருத்தை வெளியிட அரசியல் யாப்பின் உறுப்புரை 14 இன் கீழ் எனக்குரித்துண்டு.

பௌத்த சின்னங்களை அமர்த்துவது தமிழ் மக்களை அடிமைப்படுத்தவே என்பது….

என் கருத்து:அரசாங்கத்தாலும் அதன் முகவர்களாலும் வடக்கு, கிழக்கில் காணிகள் கைப்பற்றப்பட்டு வருகின்றமை என்பது ஓர் உண்மை. இதன் நோக்கம் வடக்கு, கிழக்கின் மக்கள் தொகையில் மாற்றம் ஏற்படுத்துவதே. பௌத்த சிலை அமைத்தல் இந்த நோக்க நடவடிக்கைகளுள் அடங்கும்.

எனக்கெதிரான குற்றச்சாட்டில் நான் கூறிய கருத்துக்கள் பின்வரும் சட்டங்களுக்கு முரணான விதத்தில் அமைந்துள்ளன என்று கூறப்பட்டுள்ளது. அவையாவன –

i. ICCR என்ற ஆவணத்தின் பிரிவு 3(1)
ii. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பிரிவு 2 (1) (h)
iii. இலங்கைத் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 120
iv. இலங்கைத் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 290 (b) ஆகியன.

எனது கூற்றுக்களுக்கும் குறிப்பிட்ட இந்தப் பிரிவுகளின் உள்ளடக்கங்களுக்கும் இடையில் எந்தவித தொடர்பும் இல்லை. ஆகவே, எனக்கெதிரான குற்றச்சாட்டுக்களை நான் மறுக்கின்றேன்.

இறுதியாக இலங்கைத் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 120 இற்கு தரப்பட்டிருக்கும் விளக்கத்தை இங்கு தருகின்றேன்.

'பின்வருவன இந்தச் சட்டத்தின் கீழ் குற்றங்கள் ஆகா –

1) குடியரசின் ஜனாதிபதியோ அரசாங்கமோ பிழையாக வழிநடத்தப்பட்டுள்ளார்கள் என்றோ தவறாகப் புரிந்து கொண்டுள்ளார்கள் என்றோ எடுத்துக் காட்டும் வாசகங்கள்.

2) அரசாங்கத்தின் அல்லது அரசின் ஏதாவது ஓர் அலகின் பிழைகளையோ தவறுகளையோ சுட்டிக்காட்டுவது.

3) நீதி, நிர்வாகத்தில் குறித்த தவறுகளை அல்லது பிழைகளைத் திருத்த கூறப்படும் வாசகங்கள்.

4) இலங்கைக் குடிமக்களை உணர்ச்சிக்கு உள்ளாக்கி சட்ட முறையாக நிறுவப்பட்ட ஏதேனும் ஒன்றை சட்டப்படி மாற்ற முனைவது

5) இலங்கை மக்களிடையே வெறுப்பையும் பகையையும் ஏற்படுத்தும் அல்லது ஏற்படுத்தக்கூடிய ஏதேனும்ஒன்றைநீக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டுவது.'

இறுதியாக ஒன்றைக் கூற விரும்புகின்றேன். இந்தக் குற்றச்சாட்டுகளும் அதன் வழி வந்த விசாரணைகளும் அரசாங்கமும் பெரும்பான்மைச் சமூகமும் எவ்வாறு சிறுபான்மையினர், அரசியல் அமைப்பின் உறுப்புரை 14 இன் கீழ் அவர்களுக்கு இருக்கும் தமது கருத்து சுதந்திரத்தை வெளிப்படுத்த, பலாத்காரமாகவும் பயங்கரவாத முறையிலும் இடமளியாது இருந்து வருகின்றார்கள் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

எனது கருத்துக்கள் அறிவுசார் பாற்பட்டவை. அவற்றை குற்றவியல்பாற்படுத்துவது வியப்பைத் தருகின்றது. அவ்வளவு தான் நான் தற்போதைக்குக் கூற விரும்புவது. செவ்வியின் காணொலிகளைக் கண்டால் நான் வேறேதேனும் கருத்துக்களைப் பின்னர் கூற வேண்டியிருக்கும்.

காலைக்கதிர் Kalaikkathir

## அதிகாரப் பகிர்வு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சென்னையிலிருந்து ஒளிபரப்பாகும் 'புதிய தலைமுறை' தொலைக்காட்சிச் சேவையின் 'நேர்பட பேசு' என்ற விவாத அரங்கத்தில் 'இலங்கைத் தமிழர் பகுதிகளில் சீனத்தூதர்: இந்தியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலா?' என்ற தலைப்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நேரடி ஒளிபரப்பு நிகழ்வில் கொழும்பில் இருந்து கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் முக்கியமாகக் குறிப்பிட்ட விடயங்கள் வருமாறு:-

சீனா இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் நிலை கொள்வதை நாங்கள் விரும்பவில்லை என்பதை எங்கள் கட்சி பகிரங்கமாகவே அறிவித்திருக்கின்றது. அதன் பேச்சாளராக நானே இதனை நாடாளுமன்றத்திலும் வெளியிலும் உத்தியோகபூர்வமாக அறிவித்து இருக்கிறேன்.

அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

முதலாவது காரணம் - நாங்கள், இலங்கை தமிழர்கள், எங்கள் அரசியல் உரிமைகளைக் கோருவது இரண்டு அடிப்படைகளில். ஒன்று - மனித உரிமைகள் அடிப்படையில். மற்றையது - ஜனநாயகத்தின் அடிப்படையில். சீனா இந்த இரண்டிலும் மிக மிகத் தரம் குறைந்த நாடாக இருக்கின்றது. ஆகவே சீனாவின் செல்வாக்கு இலங்கையில் இருக்குமானால் அது எங்கள் நலனை பாதிக்கும்.

அடுத்த காரணம் - இலங்கை தென் சீனக் கடலில் ஒரு தீவாக இருந்திருக்குமானால் சீனாவினுடைய நியாயமான பாதுகாப்புக் கரிசனைகளை நாம் கவனத்தில் கொண்டிருப்போம். ஆனால் யதார்த்தம் அப்படி அல்ல. இலங்கை இந்துமா சமுத்திரத்தில், இந்தியாவில் இருந்து கூப்பிடு தொலைவு தூரத்தில் இருக்கின்றது. ஆகவே, இந்தியாவின் பாதுகாப்புக் கரிசனைகளை நாம் கவனத்தில் கொள்வோமாக இருந்தால் சீனாவை நாம் வரவேற்க முடியாது. சீனா இந்தியாவினுடைய நட்பு நாடும் அல்ல. அத்தகைய நாட்டை, இந்தியாவுக்கு மிக அருகில் உள்ள இலங்கையில், குறிப்பாகத் தமிழர்கள் வாழும் வடக்கு, கிழக்கில் கால் ஊன்ற அனுமதிக்க முடியாது என்பதைத் தெட்டத் தெளிவாக நாம் கூறியிருக்கிறோம்.

அதற்குப் பிறகுதான் சீனத் தூதுவர் வடக்கே பயணம் மேற்கொண்டிருக்கிறார். ராமர் சேது பாலம் வரைப் படகில் பயணம் செய்திருக்கின்றார். இந்தியாவைச் சீண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு இருக்கின்றார்.

அண்மையில் நான் அமெரிக்கா சென்றிருந்தேன். அங்குள்ள உயர் அதிகாரிகளோடு பேசி இருக்கிறேன். அவர்கள் நேரடியாக ஒரு கேள்வி கேட்டார்கள். நாங்கள் உங்களுக்கு அரசியல் தீர்வைப் பெறுவதற்கு உதவி செய்தால், அது இலங்கையிலிருந்து சீனர்களை வெளியேற்ற எப்படிப் பங்களிக்கும் என்று கேட்டனர்.

அவர்களுக்குக் கூறிய அதே பதிலைத்தான் கொழும்பிலுள்ள இந்திய இராஜதந்திரிகளுக்கும் கூறியிருக்கிறேன்.

வழமையாக ஒரு நாடு இன்னொரு நாட்டின் பிரச்சினையில் தலையிட்டால், அந்தப் பிரச்சினையை தொடர்ந்தும் நீடித்து வைத்திருக்கவே விரும்பும். தீர்த்து வைக்க விரும்பாது. அந்தப் பிரச்சினை நீடித்தால் தான் தொடர்ந்தும் தலையீட்டையும் பேண முடியும்; ஈடுபாட்டை வைத்திருக்க முடியும் என்ற எண்ணமே இருக்கும்.

ஆனால் இலங்கைத் தமிழர் விடயத்தில் அது மாறுபட்டது. எங்களுக்கு அதிகாரப் பகிர்வை ஒழுங்காகக் கிடைக்கச் செய்தால் வடக்கு - கிழக்கில் சீனர்கள் காலூன்றுவதை நாங்கள் தடுப்போம். காணி அதிகாரம், சட்டம் - ஒழுங்கு என்பவை அதிகாரப் பகிர்வில் இருக்க வேண்டும். இன்றும் அரசமைப்பில் அவை இருக்கின்றன. ஆனால் நடைமுறையில் கிடையாது.

ஆகவே அதற்கு அப்பாலும் சென்று, நமது கைகளில் இருந்து அவற்றைப் பிரிக்க முடியாததாக ஓர் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு முறை, ஓர் அரசியல் தீர்வாகக் கிடைக்குமானால் நாங்கள், எங்கள் நிலங்களிலே சீனர்கள் வந்து கால் ஊன்றுவதை நிச்சயமாகத் தடுப்போம்.

ஆனால் இந்தப் பிரச்சினையைத் தீர்க்காமல் இருக்கின்ற வரைக்கும் - அந்த அதிகாரங்கள் எல்லாம் இலங்கையின் மத்திய அரசாங்கத்திடம்தான் இருக்கப் போகின்றன - இன்றைக்கு இருப்பதை போல.

ஆகவே, காணி அதிகாரம், சட்டம் - ஒழுங்கு அதிகாரம் என்பன இலங்கை மத்திய அரசிடம் இருக்கும் வரை அங்கு சீனர்கள் வந்து கால் ஊன்றுவதை எங்களாலும் தடுக்க முடியாது.

இலங்கைத் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகள் அப்படி ஒன்றும் தீர்க்க முடியாத பெரிய விடயங்களே அல்ல. இந்தியாவில் இருப்பதைப் போன்ற ஓர் அதிகாரப் பகிர்வைக் கூட நாங்கள் எதிர்பார்க்கிறோம். அதைப் பெற்றுத் தருவதில் இந்தியா முனைப்பாகச் செயற்படுமானால் - அதை எங்களுக்குப் பெற்றுத் தருவதை இந்தியா உறுதிப்படுத்துமானால் - நிச்சயமாக சீனா மட்டுமல்ல, எந்தப் பிராந்திய வல்லரசு அல்லது வேறு எந்த சக்தியும் இந்தியாவுக்குச் சவாலாக எங்கள் நாட்டில் நிலை கொள்வதை நாங்கள் நிச்சயமாகத் தடுப்போம். - என்றார்.

---

## மனோவுக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆணைக்குழுவின் விசாரணைக்கு சமுகம் அளிக்கும்படி, கடந்த வாரம் தனிச் சிங்கள மொழியில் இந்த அழைப்பாணை மனோ கணேசன் எம்.பிக்கு அனுப்பப்பட்ட போது, அதை ஏற்க மறுத்து தமிழ் மொழியில் அழைப்பாணையை அனுப்பும்படி அவர் கூறியிருந்தார்.

இந்நிலையில், கடந்த ஆட்சிக்கு முந்தைய ஆட்சியின்போது நடைபெற்றதாக கூறப்படும் ஊழல்களை விசாரிக்க, கடந்த ஆட்சியில் அமைக்கப்பட்ட ஊழல் எதிர்ப்பு குழு மற்றும் அதன் செயலகம் தொடர்பாக ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட விசேட ஜனாதிபதி ஆணைக்குழு சார்பாக ஆணைக்குழுவின் செயலாளர் எச்.எம்.பீ.பி.ஹேரத், மனோவின் இல்லம் அமைந்துள்ள வலயப் பொலிஸ் நிலையம் மூலம் குறித்த அழைப்பாணையை அனுப்பிவைத்துள்ளார்.

---

## வேலணை பிரதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைமையில் இடம்பெற்றிருந்தது.

பிரதேச சபைக்குச் சொந்தமான வேலணை வங்களாவடி கடைத்தொகுதியின் வேலைகளை முன்னெடுப்பதற்கு சபையின் நிலையான வைப்பில் இருக்கும் நிதியை மீளப்பெறுவதற்கு சபை உறுப்பினர்களிடம் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுவதற்காகவே நேற்றைய விசேட கூட்டம் கூட்டப்பட்டிருந்தது.

இதன்போது சபையின் தற்போதய ஆட்சியாளர்களின் அசமந்தப்போக்கு காரணமாகவே வேலைகள் இதுவரை நிறைவடையவில்லை என உறுப்பினர்கள் குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தனர்.

தொடர்ந்து உறுப்பினர்களின் குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொண்ட தவிசாளர் நடந்த தவறுக்கு மன்னிப்புக் கோரியதை அடுத்து நிலையான வைப்பில் உள்ள நிதியை மீளப்பெறுவதற்கு அனைத்து உறுப் பினர்களும் ஏகமனதாக அனுமதி வழங்கியிருந்தனர்.

இரண்டு கட்டங்களாகக் கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்குத் திட்டமிடப்பட்டு அதில் முதலாவது கட்ட வேலைகள் கடந்த மாதம் 28 ஆம் திகதி நிறைவடையும் எனக் கூறப்பட்ட போதும் இன்று வரை நிறைவடையாமல் இருக்கின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள விலையேற்றம் காரணமாகவே வேலைகளை முழுமையாக முடிப்பதில் தாமதம் ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்ட போதும் அதனை சில உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ளாதமையால் சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

நேற்றைய சபை அமர்வுக்கு ஊடகவியலாளர்கள் சென்றபோது விசேட அமர்வுகளுக்கு ஊடகவியலாளர்களை அனுமதிக்க முடியாது எனத் தவிசாளர் உள்ளிட்ட சில உறுப்பினர்கள் கூறியிருந்தனர்.

தவிசாளரின் கருத்துக்கு உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தமையை அடுத்து ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முன்னாள் தலைவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2019ஆம் ஆண்டு மே 3ஆம் திகதி இராணுவத்தினர் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக வளாகத்திலும், விடுதிகளிலும் பெருமெடுப்பில் சோதனைகளை முன்னெடுத்தனர்.

நூற்றுக்கணக்கான படையினர் இந்தத் தேடுதலில் ஈடுபட்டனர்.

இந்தத் தேடுதலின் போது, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய அறையில் இருந்து விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் படம், மற்றும் இனப்படுகொலைகள் தொடர்பான சில பதாதைகள், உள்ளிட்டவை கைப்பற்றப் பட்டன.

இதையடுத்து, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எம்.திவாகரன், செயலாளர் எஸ். கபில்ராஜ் ஆகியோர் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதன்போது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு இராணுவ அதிகாரியால் எழுத்து மூல ஆவணம் ஒன்று பொலிஸாரிடல் சமர்ப்பிக்கப்பட்டது.

அன்றைய தினம் முன்னிரவு யாழ்ப்பாணம் நீதிவானின் இல்லத்தில் மாணவர்கள் இருவரும் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

மாணவர்கள் இருவர் மீதும் பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் உப விதிகளின் கீழான ஏற்பாடு மற்றும் சர்வதேச குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான பட்டயம் ஆகிய நான்கு ஏற்பாடுகளின் கீழ் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

அதனால் மாணவர்கள் இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் மற்றும் செயலாளருக்கு எதிரான வழக்கை தள்ளுபடி செய்யும் விண்ணப்பத்தை நிராகரித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் வழங்கிய கட்டளை மீது யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சீராய்வு மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

நான்கு குற்றச்சாட்டுகளில் மேன்முறையீட்டு நீதிமன்றால் மட்டும் பிணை வழங்கக் கூடிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டை மீளப் பெறுமாறு கோப்பாய் பொலிஸாருக்கு சட்ட மா அதிபரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவரும் 13 நாள்களின் பின்னர் மே 16ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் சுமார் 30 மாதங்களின் பின்னர் யாழ்ப்பாணம் பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் மற்றும் செயலாளருக்கு எதிராக குற்றப்பத்திரிகை கொழும்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் 2019 மே 3ஆம் திகதி நடத்திய தேடுதலில் மருத்துவபீட சிற்றுண்டிச்சாலையில் தியாக தீபம் திலீபனின் ஒளிப்படம் ஒட்டப்பட்டிருந்தமையை அடுத்து சிற்றுண்டிச்சாலை நடத்துனர் கைது செய்யப்பட்டார். அவர் 12 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். பின்னர் அவர் மீதான வழக்கு பொலிஸாரால் மீளப்பெறப்பட்டது.

---

## 'வல்லை சர்வதேசப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று கொழும்பில் இடம்பெற்றபோது இந்த முடிவு எட்டப்பட்டது.

இதன்போது 'வல்வெட்டித்துறை சர்வதேச பட்டத் திருவிழா - 2022' இனை கோலாகலமாக நடத்துவதற்கு இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் முழு ஆதரவை வழங்குவதாக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

ஆண்டுதோறும் தைப்பொங்கல் தினத்தில் யாழ். வல்வெட்டித்துறை கடற்கரையில் பட்டத் திருவிழா நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஆட்சி மாற்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கோட்டை தேர்தல் அமைப்பின் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு இதுவரை இல்லாத பாரிய நெருக்கடிக்குள் தள்ளபட்டுள்ளது. நாடு தற்போது உணவுப் பற்றாக்குறையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது. இன்னும் ஓரிரு மாதங்களில் அரிசி போன்ற அத்தியாவசியப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படும்.

எந்தவொரு கட்சியும் தனித்து அரசை அமைக்கவில்லை. தற்போதைய அரசுக்கு 69 இலட்சம் வாக்குகளை வழங்குவதற்கு 12 அரசியல் கட்சிகள் பங்களிப்பை வழங்கியுள்ளன.

இன்று சமூக, அரசியல் மற்றும் சர்வதேச துறைகளில் நெருக்கடியைக் காண்கின்றோம். மேலும் சர்வதேச உறவுகளை நிர்வகிப்பதில் பரிதாபகரமான தோல்வி உள்ளது. ஊழல், மோசடிகள் காரணமாக சர்வதேச சமூகத்தைச் சேர்ந்த எவரும் அதைக் காப்பாற்ற வரமாட்டார்கள்.

அண்மையில், மேற்கத்தேய தூதரகத்தின் தூதுவர் ஒருவர் எனது இல்லத்துக்கு வந்து என்னைச் சந்தித்தபோதே இதைக் கூறினார்.

ஐ.நா. அமைப்பு மற்றும் உலக வங்கி மூலம் மேற்கத்தேய நாடுகள் மட்டுமே இலங்கைக்கு தங்கள் உதவிகளை வழங்கும்.

இடதுசாரி சாய்வு, முற்போக்குச் சக்திகள் உள்ளடக்கிய அரசியல் உருவாக்கத்தை உருவாக்க வேண்டியது மிகவும் அவசியம் - என்றார்.

---

## மேயர் மணியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாநகர சபை உறுப்பினர்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மாநகர சபை அமர்வு நேற்று இடம்பெற்றபோது மேயரின் செயற்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்து மாநகர முன்றிலில் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது மேயரின் அராஜகம் ஒழிக, சபையின் மாண்பைக் காப்பாற்று, வர்த்தகர்களின் வயிற்றில் அடிக்காதே போன்ற கோஷங்கள் மாநகர சபை உறுப்பினர்களால் எழுப்பப்பட்டன.

---

## 2022இல் நீண்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆண்டுக்கான நீண்ட விடுமுறை நாள்கள் பின்வருமாறு:-

ஜனவரி மாதம் 14, 15, 16 மற்றும் 17ஆம் திகதிகளும், பெப்ரவரி மாதம் 04, 05 மற்றும் 06 ஆம் திகதிகளும், மார்ச் மாதம் 17,18,19 மற்றும் 20 ஆம் திகதிகளும், ஏப்ரல் மாதம் 13, 14, 15, 16, 17ஆம் திகதிகளும், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் தொடர்ச்சியாக 30, 01, 02 மற்றும் 03ஆம் திகதிகளும், மே மாதம் 14, 15 மற்றும் 16 ஆம் திகதிகளும், ஜூன் மாதம் 11, 12, 13 மற்றும் 14 ஆம் திகதிகளும், ஆகஸ்ட் மாதம் 11, 12, 13 மற்றும் 14 ஆம் திகதிகளும், ஒக்டோபர் மாதம் 08, 09, 10ஆம் திகதிகளும், 22, 23 மற்றும் 24 ஆம் திகதிகளும், நவம்பர் மாதம் 05, 06 மற்றும் 07ஆம் திகதிகளும், டிசம்பர் மாதம் 24, 25 மற்றும் 26ஆம் திகதிகளும் 2022 ஆம் ஆண்டில் நீண்ட விடுமுறை நாள்களாகக் காணப்படுகின்றன.


விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

# தமிழ் மக்கள் நிலைமை மேலும் மோசமடைவதை தடுப்பதற்கே 13 ஐ அமுல்படுத்தக் கோருகிறோம்!

## அது தீர்வாகாது என்கிறார் விக்னேஸ்வரன் எம்.பி.



நாம் சட்டப் புத்தகத்தில் இருக்கும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தக் கோருவது நாளுக்கு நாள் எமது நிலைமை மோசமாகிக் கொண்டு வருவதைத் தடுக்கவே. அது தமிழ் மக்களுக்கு ஒருபோதும் தீர்வாக அமையாது.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன்.

வாரந்த கேள்வி - பதிலில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு

**கேள்வி:-** கடந்த தேர்தலில் உங்கள் கட்சி முன்வைத்த விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு சுவதேச சமூகத்தால் நடத்தப்படும் சுவஜன வாக்கெடுப்பு ஒன்றின் ஊடாகவே பெறப்படவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தீர்கள். ஆனால், தற்போது 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் தீர்வைப் பெறும் முயற்சிகளை நீங்கள் முன்னெடுத்திருப்பது ஏன்?

**பதில்:-** மிகவும் சுருக்கமாக இந்த கேள்விக்கு நான் பதில் அளிக்கின்றேன். 13 ஆவது திருத்த சட்டத்தை ஒரு தீர்வாகநாம் ஏற்றுக்கொண்டுவிட்டோம் என விஷமத்தனமான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இது தொடர்பில் நான் முன்னரும் மிகவும் தெளிவாக எனது நிலைப்பாட்டைக் கூறியிருக்கின்றேன். எங்களுடன் சேர்ந்து பல தமிழ்க் கட்சிகள் அண்மையில் கூடி 13 ஆவது திருத்த சட்டத்தை அமுல்படுத்துவதற்கு இந்தியாவை வலியுறுத்துவதற்கு எடுத்த தீர்மானத்துக்கும் எமது அரசியல் தீர்வுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ஏற்கனவே இலங்கையின் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பில் இருக்கும் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் இருக்கும் ஒருசில சாதகமான விடயங்களை எமது தற்பாதுகாப்புக்காகப் பயன்படுத்துவதற்கு முயலும் ஒரு நடவடிக்கையே இது. இதனை நான் தற்போது மட்டும் கூறவில்லை. நான் முதலமைச்சராக இருந்தபோதே, 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் பொலிஸ் மற்றும் காணி அதிகாரம், முதலமைச்சர் நிதியம் ஆகியவை தரப்படவேண்டும் என்று பல தடவைகள் வலியுறுத்தி இருந்தேன்.

நில அபகரிப்பு, போரின் பின்னைய வறுமை, சமூக சீர்கேடு, இராணுவமயமாக்கல் ஆகியன காரணமாக ஆபத்தின் விளிம்பில் இருக்கும் எமது தேசத்தைப் பாதுகாப்பதற்கு சில நடவடிக்கைகளை நாம் அவசரமாக முன்னெடுக்க வேண்டியுள்ளது. 'தீர்வு வரும், தீர்வு வரும்' என்று நாம் காலத்தை இழந்துகொண்டிருக்கும் ஒவ்வொரு கணமும் நாம் எமது தேசத்தை இழந்து கொண்டிருக்கின்றோம் என்பதே உண்மை. ஆகவே தான் நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வை நாம் பெற்றுக் கொள்ளும்வரையில் இருப்பவற்றைப் பாதுகாப்பதற்கு ஏற்கனவே சட்டத்தில் இருக்கும் அதிகாரங்களை நாம் எவ்வாறு பயன்படுத்தலாம் என்று முயற்சிக்க வேண்டியுள்ளது.

தற்போது எமக்கு நாம் விரும்பும் ஒரு தீர்வைப் பெற்றுக்கொள்ளும் காலம் கனிந்துவிட்டதாகவும் இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் 13 ஆவது திருத்தச் சட்டத்தை இதனால்தான் வலியுறுத்துகின்றோம் என்பதுபோலவும் உண்மைக்கு மாறான கருத்துக்கள் கூறப்பட்டுவருகின்றன. முள்ளிவாய்க்காலுக்குப் பின்னரான கடந்த 12 வருடங்களில் ஒவ்வொரு வருடமும் எமக்குத் தீர்வு வரும் என்ற நம்பிக்கையுடனேயே நாம் வாழ்ந்துவந்திருக்கின்றோம். யுத்தம் முடிவடைந்து மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டபோது அதில் நாம் போட்டியிட்டபோது கடும் எதிர்ப்புக்கள் எமக்கெதிராக முன்வைக்கப்பட்டன. மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது என்பது 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஒரு தீர்வாக நாம் ஏற்றுக் கொண்டுவிட்டோம் என அர்த்தப்படுத்தப்பட்டுவிடும் என்று சில கட்சிகள் எதிர்ப்புத்தெரிவித்தன. தேர்தலையும் புறக்கணித்தன. ஆனால், உண்மையான நிலைமை அப்படி இருக்கவில்லை. அன்றே, நாம் 13 ஆவது திருத்த சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு ஒற்றுமையுடன் நடவடிக்கை எடுத்து இருந்தால், இன்று மிகவும் பலமான ஒரு நிலையில் இருந்திருப்போம். அந்த நிலையில் நின்று கொண்டு எமது நிரந்தரத் தீர்வுக்காகப் போராடியிருப்போம். இன்று எமது நிலை மிகவும் வருந்தத்திற்குரியதாக மாறியுள்ளது. இரண்டு பெரும்பான்மைக் கட்சிகளும் மாகாண சபைத் தேர்தலைப் புறக்கணித்து வந்துள்ளார்கள். எந்தவகையிலும், 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தக் கோருவது எமது சுயநிர்ணய அடிப்படையிலான தீர்வுக்கான கோரிக்கையை பாதிக்க முடியாது. ஆகவே, தவறுகளில் இருந்து நாம் பாடங்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

தீர்வுக்கான எமது நடவடிக்கைகளும் ஒற்றையாட்சியின் கீழ் 13 ஆவது திருத்த சட்டத்தை அமுல்படுத்துவதற்கான எமது முயற்சிகளும் வெவ்வேறானவை. அவை சமாந்திரமானவை, ஒருபோதும் ஒன்றுடன் ஒன்று சந்திக்க முடியாதவை. 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் நான் முதலமைச்சராக இருந்திருக்கின்றேன். எமக்கு அமைச்சர்கள் இருந்தார்கள். பல நிறுவனங்கள் இருந்தன. ஆனால், இதற்காக எமது சுய நிர்ணயத்துக்கான கோரிக்கை ஒருபோதும் பாதிக்கப்படவில்லை. மாறாக, எனது பதவியைப் பயன்படுத்தி சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கையை நான் வலுப்படுத்தி இருக்கின்றேன். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு யாழ்ப்பாணத்தில் பொதுமேடையில் வைத்து நேருக்கு நேராகவே 13 ஆவது திருத்தம் ஒருபோதும் எமக்கு ஒரு தீர்வு அல்ல என்று கூறியிருக்கின்றேன். மாகாண சபை ஆட்சி அமைந்துவிட்டது என்பதற்காக தாயகத்திலும் சரி, புலம்பெயர் நாடுகளிலும் சரி எமது மக்கள் சுயநிர்ணயத்துக்கான கோரிக்கையையோ நடவடிக்கைகளையோ கைவிடவில்லை. 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட்டாலும் நிலைமை அதுதான்.

நாம் சட்டப் புத்தகத்தில் இருக்கும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தக் கோருவது நாளுக்கு நாள் எமது நிலைமை மோசமாகிக் கொண்டு வருவதைத் தடுக்கவே.

தமிழ் மக்களுக்கான நிறைந்த இறுதித் தீர்வு சுவதேச சமூகத்தால் நடத்தப்படும் சுவஜன வாக்கெடுப்பு ஒன்றின் ஊடாகவே நடைபெற வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. தமிழ்க் கட்சிகள் காலம் காலமாக சமஷ்டியை ஒரு தீர்வாக வலியுறுத்தி வருகின்றன. கூட்டு சமஷ்டியே நிரந்தத் தீர்வாக அமைய முடியும் என்பது எமது கூட்டணியின் நிலைப்பாடு. இதனை நாம் தீர்மானிக்க முடியாது. எமது மக்களே தீர்மானிக்க வேண்டும். அதனால்தான் சுவஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கு நாம் கோரிக்கை முன்வைத்திருக்கின்றோம். இதனை இந்தியாவிடமும் நாம் வலியுறுத்தி உள்ளோம். மீண்டும் வலியுறுத்துவோம். ஆனால், சுவஜன வாக்கெடுப்பு இன்று நடக்கும், நாளை நடக்கும் என்று எதிர்பார்த்திருந்து எமது நிலத்தையும் மக்களையும் நாம் இழந்து விடக்கூடாது. ஒவ்வொருநாளும் எமது நிலம் பறிபோகின்றது. பெருமளவில் எமது மக்கள் வெளியேறுகின்றார்கள். ஆகவேதான் ஏற்கனவே இருக்கும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தி சில வலுவூட்டும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள நாம் நடவடிக்கை எடுக்க முன்வந்துள்ளோம்.

இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், தமிழ்த் தேசத்தை இல்லாமல் செய்வதற்கான பாரிய திட்டங்களை அவர்கள் பல காலத்துக்கு முன்பிருந்தே வகுத்திருக்கின்றார்கள். தமது திட்டங்களை நிறைவேற்றுவதற்கான அவர்களின் மிக சிறந்த உத்தி, காலத்தைக் கடத்துவதுதான். காலங்கடத்தி சிறிது சிறிதாக வடக்கு, கிழக்கை ஆக்கிரமிப்பதே அவர்களின் குறிக்கோள். கடந்த 12 வருடங்களில் சிறிய அதிகாரத்தைக் கூட எமக்கு வழங்காமல் காலத்தை இழுத்தடிப்பு செய்ததன் மூலமே எம்மை அவர்கள் பலவீனப்படுத்தி இருக்கின்றார்கள். வடக்கையும் கிழக்கினையும் புவியியல் ரீதியாகப் பிரிப்பதற்கும், முல்லைத்தீவை ஓர் அம்பாறை ஆக்குவதற்கும் அவர்களுக்கு இன்னமும் சிறிது காலம் மட்டுமே தேவைப்படுகின்றது. தமிழ் மக்கள் தம்மை தாமே பாதுகாப்பதற்கான அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ள விடாமல் எவ்வளவுக் எவ்வளவு காலத்தை இழுத்தடிக்க முடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு தமிழ்த் தேசத்தை நிர்மூலம் செய்ய முடியும் என்பது அவர்களின் கணிப்பு. அதுதான் உண்மையும் கூட. புள்ளிவிவரங்கள் அதைத் தான் எடுத்துக் காட்டுகின்றன.

நாம் கோரிக்கை விடுவதால் இலங்கை அரசாங்கம் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு இலகுவில் உடன்படப்போவதில்லை. ஆனால், இதனை அமுல்படுத்துவதற்கு இலங்கையை நிர்ப்பந்திப்பதற்கான தகுதியும், உரிமையும், கடமையும் இந்தியாவுக்கு இருக்கின்றது. இந்தியாவிடம் நாம் இந்தக் கோரிக்கையை எந்தவிதமான கால வரையறையும் இன்றி திறந்ததாக விடுக்கவில்லை. தமிழ் பேசும் மக்களுக்கு இலங்கையில் இன்று ஏற்பட்டுள்ள ஆபத்தான நிலைமையை தீவிரமாக கவனத்தில் எடுத்து, மிக விரைவாக 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

இந்த இடத்தில் எமது முஸ்லிம் சகோதரர்கள் பற்றியும் மலையகச் சகோதரர்கள் பற்றியும் ஒரு சில வாசகங்களை உள்ளடக்குவது உசிதம் என்று எனக்குப் படுகிறது. வடக்கு - கிழக்கு முஸ்லிம் தலைவர்கள் சிலர் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தினால் அது முஸ்லிம் மக்களுக்கு பாதகம் விளைவிக்கக் கூடும் என்று எண்ணுகின்றார்கள். இது தவறு. வடக்கு- கிழக்கு முஸ்லிம் மக்கள் சிந்திக்க வேண்டிய ஒரேயொரு விடயம் தமது முஸ்லிம் அலகு தமிழ்ப் பேசும் பிரதேசமாக வடக்கு, கிழக்கினுள் இருக்க வேண்டுமா அல்லது சிங்கள பெரும்பான்மையினர் வசம் இருக்க வேண்டுமா என்பது. சிங்களப் பெரும்பான்மையினர் வசம் சென்றால் தமக்கு என்ன நடக்கும் என்பதை முஸ்லிம் சகோதரர்கள் கடந்த சில வருடங்களுக்குள் உணர்ந்திருப்பார்கள். வடக்கு, கிழக்கில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் இடங்களை ஒன்று சேர்த்து சமஷ்டி முறையிலான முஸ்லிம் அலகின் கீழ் கொண்டு வருவது சிரமமல்ல. அதேபோன்று மலையகத் தமிழ் மக்களும் பெரும்பான்மையாக வசிக்கும் இடங்களை ஒன்று சேர்த்து சமஷ்டி முறையிலான மலையகத் தமிழர் அலகை ஸ்தாபிப்பது சிரமமல்ல. ஆனால் கிழக்கு மாகாண முஸ்லிம் சகோதரர்கள் சிங்கள அலகினுள் சென்றால் காலக்கிரமத்தில் தமிழ் மொழி அவர்களிடையே அழிந்து போகும். இஸ்லாம் மதமும் வெகுவாகப் பாதிக்கப்படும். இவற்றையெல்லாம் முஸ்லிம் தலைவர்களும் விடுதலைப் புலிகளும் கருத்துப் பரிமாறிய பின்னரே அவர்களுக்குள் ஓர் உடன்பாடு முன்னர் ஏற்பட்டது.

எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு இஸ்லாமிய மக்கள் தலைவர்களும், மலையக மக்கள் தலைவர்களும் எம்முடன் சேர்ந்து ஒருவருக்கொருவர் பலமாக இருப்பதே தற்போதைய அவசரமான தேவையாகும்.

# பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா நேர்முகப் பரீட்சை 30 ஆம் திகதி

யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீடத்தில் பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா கற்கைநெறியைப் பயில்வதற்காக கல்வி அமைச்சால் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுள் இதுவரை நேர்முகப் பரீட்சையில் தோற்றாத மாணவர்கள் 30.12.2021 அன்று காலை 9.30 மணிக்கு கலைப்பீட சபையறையில் நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சையில் தோற்றுமாறு வேண்டப்படுகின்றனர்.

கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு மாற்றுவதற்கான அனுமதியைப் பெற்ற மாணவர்கள் அதற்காக கல்வியமைச்சால் வழங்கப்பட்ட கடிதத்தை நேர்முகப் பரீட்சைக்கு கொண்டு வருதல் வேண்டும்.

மேலும் கலைப்பீட பீடாதிபதி அலுவலக தொலைபேசி எண்ணுக்குத் தொடர்பு கொண்டு (021- 2223091) நேர்முகப்பரீட்சைக்கு கொண்டுவரவேண்டிய ஆவணங்கள் தொடர்பான விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் திரு.வி. காண்டீபன் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.12.2021 இல் வெளியிடப்பெற்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# வெளிநாட்டில் இருந்து பரிசுப் பொருள்கள் வந்துள்ளன என்று 11 லட்சம் ரூபா மோசடி

## பெண்ணொருவர் விளக்கமறியலில்

வெளிநாட்டிலிருந்து பெறுமதியான பொருள்கள் அனுப்பப்பட்டுள்ளன எனவும், அதனைப் பெறுவதற்குப் பணத்தை வைப்பிலிடுமாறு கோரி சுமார் 10 லட்சத்து 85 ஆயிரம் ரூபா பணத்தை மோசடி செய்தவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சி - திருமுறிகண்டி பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரை கிளிநொச்சியைச் சேர்ந்த மற்றொரு பெண் தொடர்பு கொண்டு வெளிநாட்டிலிருந்து பெறுமதியான பொருள்கள் அனுப்பப்பட்டுள்ளன எனவும், அதனைப் பெறுவதற் குப் பணத்தை வங்கிக் கணக்கில் வைப்பிலிடுமாறும் கூறியுள்ளார்.

இதற்கமைய முறிகண்டியைச் சேர்ந்த பெண் சுமார் 10 லட்சத்து 85 ஆயிரம் ரூபா பணத்தை வங்கியில் வைப்பிலிட்டுள்ளார்.

இது தொடர்பில் கடந்த செப்டெம்பர் மாதம் பொலிஸாரிடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

அதன்பின் பொலிஸாரின் விசேட நடவடிக்கை மூலம் கொழும்பு தெமட்டகொடைப் பகுதியில் வைத்து, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்பட்ட நிலையில், எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவ்வாறானநடவடிக்கைகள் தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விமல், வாசுதேவ, கம்மன்பிலவை அமைச்சரவையிலிருந்து நீக்கேன்!

## கோட்டாபய திட்டவட்டம்



கொழும்பு, டிசெ. 29

அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு தொடர்பில் அபத்தமான கருத்தைக் கொண்டுள்ளமையால் விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார மற்றும் உதய கம்மன்பில ஆகிய மூன்று அமைச்சரவை அமைச்சர்களைப் பதவிகளில் இருந்து நீக்குவதில் தனக்கு எவ்வித அவசியமும் இல்லை என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகநிறுவனங்களின்பிரதானிகளுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

கூட்டுப் பொறுப்பில் எடுக்கப்படும் தீர்மானங்கள் தொடர்பில் கருத்துவேறுபாடுகள் இருப்பின் அமைச்சரவையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்குப் பதிலாக அதிலிருந்து விலகி கருத்து வெளியிடுவதே சிறந்தது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பிரேமதாஸவின் ஆட்சிக் காலத்தில் கூட்டுப் பொறுப்பை மீறியமை தொடர்பில் லலித் அத்துலத்முதலி மற்றும் ஜி.எம். பிரேமசந்திர ஆகிய அமைச்சர்களுக்கு எதிரான வழக்கில் நீதிபதி மார்க் பெர்னாண்டோ வழங்கிய தீர்ப்பை ஜனாதிபதி இதன் போது நினைவுகூர்ந்தார்.

# பெப்ரவரி மாதமளவில் உரப்பிரச்சினைக்குத் தீர்வு

## உறுதியளித்தது அரசு




முன்பதிவு செய்யப்பட்ட உரத்தொகை நாட்டுக்கு கிடைக்கப் பெற்றுள்ளது எனவும், அடுத்த வருடம்பெப்ரவரிமாதமளவில்உரப்பிரச்சினைக்கு முழுமையாக தீர்வு எட்ட முடியும் எனவும் பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நிவாரண முறையில் எதிர்காலத்தில் உரம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

இதன்படி, 100 கிலோ கிராம் பச்சைக் கொழுந்துக்கு 40 கிலோ உரம் வழங்க அரசு தீர்மானித்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

உரம் மற்றும் பூச்சிக் கொல்லிகள் இன்மையால் மரக்கறிகளின் அறுவடை வீழ்ச்சியடைந்துள்ளது.

இதன்காரணமாக மரக்கறிகளின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளன.

நாட்டின் பெரும்பாலான பொருளாதார மத்திய நிலையங்களில் பச்சை கொச்சிக் காய் கிலோ ஒன்றின் சில்லறை மற்றும் மொத்த விலை 800 ரூபா முதல் ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

இதுதவிர, போஞ்சி, கரட், பீட்ரூட், லீக்ஸ் மற்றும் கோவா ஆகியவற்றின் மொத்த விலை 220 ரூபா முதல் 500 ரூபாவாகக் காணப்படுகின்றது.

# பூநகரியில் இளைஞர் கொலை; பெண் உட்பட நால்வர் சிக்கினர்

கிளிநொச்சி மாவட்டம், பூநகரி - கௌதாரிமுனை பகுதியில் சுற்றுலா சென்றவர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய 4 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட 4 சந்தேக நபர்களும் குருநகர் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

கடந்த 26ஆம் திகதி நடந்த மோதலில், ஆனைக்கோட்டை - சோமசுந்தரம் வீதியை சேர்ந்த ரஞ்சன் நிரோஷன் என்ற 22 வயதுடைய இளைஞர் கத்தியால் குத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பிலேயே 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 46 வயதான பெண் மற்றும் 51, 55, 40 வயது களையுடைய ஆண்களே கைதாகியுள்ளனர்.

அவர்கள் பயணித்த படகும் இயந்திரமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

பூநகரி பொலிஸாரினாலேயே அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# காணாமல்போன பெண் உரப்பையில் கட்டிய நிலையில் சடலமாக நேற்று மீட்பு

## கிளிநொச்சியில் திடுக்கிடும் சம்பவம்

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் காணாமல்போயிருந்த பெண் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரது வீடு அமைந்துள்ள அம்பாள்குளத்திலிருந்து சில கிலோமீற்றர்கள் தொலைவில் உள்ள யூனியன்குளத்தில் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உரப்பையொன்றில் கட்டப்பட்ட நிலையில் பாலமொன்றின் கீழ் சடலம் காணப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

லண்டனில் மகனுடன் வசித்து வந்த இராசேந்திரம் இராசலட்சுமி (வயது- 67) என்பவர் கடந்த மூன்று வருடங்களின் முன்இலங்கைதிரும்பியுள்ளார்.

கிளிநொச்சி, உதயநகர் பகுதியில் உள்ள தனது காணியைப் பார்ப்பதற்காக அம்பாள்குளம் பகுதியில் வாடகைக்கு வீடெடுத்து தங்கியிருந்துள்ளார்.

தனியாக வசித்து வந்திருந்த நிலையில் நேற்றுமுன்தினம் வங்கிக்குச் சென்று திரும்பினார் எனவும், பிற்பகல் 3 மணி முதல் 6 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் அவர் காணாமல்போயிருந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

குறித்த பெண் இவ்வாறு காணாமல்போயுள்ள விடயம் நேற்றுமுன்தினம் மாலை 7.20 மணியளவிலேயே உறவினர்களுக்குத் தெரியவந்துள்ளது.

குறித்த பெண் காணாமல் போயுள்ளமை தொடர்பில் வீட்டு உரிமையாளரால் நேற்று மாலை 6 மணியவில் பொலிஸில்முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். வீட்டின் உள்ளே இரத்தக் கறைகள் காணப்பட்டமையால் அவர் கொலைசெய்யப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டது.

இவ்வாறு காணாமல் போயுள்ள பெண் பூநகரி, தம்பிராய் பகுதியைச் சேர்ந்தவர் என்றும், அவரது 5 பிள்ளைகளும் வெளிநாட்டில் வசித்து வருகின்றனர் என்றும், கணவர் விவசாயம் செய்து வருகின்றார் எனவும் தெரியவந் தது.

இந்தநிலையிலேயே சடலம் யூனியன்குளத்தில் நேற்று மீட்கப்பட்டது.

இதேவேளை, இந்த வீட்டில் வாடகைக்குக் குடியிருந்த ஆசிரியை ஒருவர் கடந்த சில வருடங்களின் முன்னர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீடகப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சிறிதரனின் நிதி ஒதுக்கீட்டில் வடமராட்சி கிழக்கில் உதவி!



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் பன்முகப் படுத்தப்பட்ட நிதியிலிருந்து வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அதற்கமைய வெண்ணிலா விளையாட்டுக்கழகத்தின் புனரமைப்புக்காக ஒரு லட்சம் ரூபாவும், வெற்றிலைக் கேணி சென் செபஸ்ரியார் விளையாட்டுக்கழகம், ஆழியவளை அருணோதயா விளையாட்டுக்கழகம், உடுத்துறை பாரதி விளையாட்டுக்கழகம், நாகர் கோவில் நாகதீபம் விளையாட்டுக்கழகம் ஆகியவற்றுக்குத் தலா ஐம்பதாயிரம் ரூபா வீதமும் நிதி ஒதுக்கப்பட்டே குறித்த விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கு. பிரபாகரமூர்த்தி தலைமையில் நேற்று நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம்சிறிதரன் கலந்துகொண்டார்.

அத்துடன் பருத்தித்துறை பிரதேசசபை தவிசாளர் அ.சா.அரியகுமார், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்களான ஆ.சுரேஷ்குமார், சி.பிரசாத், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராம சேவகர்கள், அதிகாரிகள், விளையாட்டுக் கழகங்களின் உறுப்பினர்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# உழவு இயந்திரத்தில் இருந்து தவறி வீழ்ந்து ஒருவர் மரணம்

யாழ்., தென்மராட்சி, கொடிகாமம் - மிருசுவில் பகுதியில் உழவு இயந்திரத்தில் இருந்து தவறி வீழ்ந்த நபர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

சரசாலை வடக்கு பகுதியைச் சேர்ந்த 58 வயதான சுந்தரராஜா என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தின்போது படுகாயமடைந்த நிலையில், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அவர் மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.